# நிதி ஆணைக்குழு

## 2013ஆம் ஆண்டின் வருடாந்தப் பாதீட்டிலிருந்து

( அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஆர் ( 4 ) பிரகாரம்)

## மாகாணங்களிடையே நிதிகளைப்பகிர்ந்தளிப்பது தொடர்பாக

## மேதகு ஜனாதிபதி அவர்களுக்குச் செய்யம் பரிந்துரைகள்

மார்ச் 2013

இல:48 வஜிரா வீதி

கொழும்பு-04

மார்ச் 2013

மேதகு மஹிந்த ராஜபக்ஷ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுச் சனாதிபதி

சனாதிபதி செயலகம்

கொழும்பு-01

மேதகு உத்தமனாரே!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் 154 ஆர் ஆம் உறுப்புரையின் கீழ் மாகாணங்களின் பயன்படுத்தல்களுக்காக அரசாங்கத்தினால் வருடாந்தப் பாதீட்டிலிருந்து நிதிகளைப் பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டிய கொள்கைகளைப் பரிந்துரை செய்யும் வண்ணம் நிதி ஆணைக்குழு வேண்டப்படுகிறது.

2013 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்காக இத்துடன் இணைத்துள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள

(கையொப்பம்)ஆரியரத்ன ஹேவகே

தலைவர்

நிதி ஆணைக்குழு

# உள்ளடக்கம்

1. நிதி ஆணைக்குழுவின் ஆணை…………..……………………………………………………..6

1.1 அதிகாரப்பகிர்வில் பிரதான சட்டபூர்வமான ஏற்பாடுகள்……………...…………………6

1.1.1 அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம்……………………….....………7

1.1.2. 1987ம் ஆண்டின் 42ம் இலக்க மாகாணசபைகள் சட்டம்……………..….7

1.1.3. அரசியலமைப்பின் பதினெட்டாவது திருத்தம்…………………………………7

1.1.4. உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான சட்டபூர்வமான அடிப்படை…………….8

1.1.5. உள்ளூராட்சி அதிகாரசபை நிதி ……………………………………………...9

2 .அரசாங்க நிதியை மாகாணங்களுக்கு மாற்றுதல்……………….……………………………10

2.1 .மொத்தக்கொடை……………………………….........................................................10

2.2 .காரணிகளை அடிப்படையாகக் கொண்ட மானியக் கொடை (CBG)………..……....10

2.3. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)…………………...12

3. மாகாணங்களுக்கிடையில் வளங்களைப்பகிர்ந்தளிக்க பயன்படுத்திய காரணிகள்……………..15

3.1 .வளங்கள் பகிர்வுக்கு பயன்படுத்திய முறைகள்……………………………………...22

3.2. துறைகளுக்கிடையில் வளங்களைப் பகிர்ந்தளிக்க கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள்……………………………………………………………………….24

4. மாகாண வருமானம்……………………………………………………………………26

4.1. அரசாங்க வருமானத்தை மாற்றுதல்…………………………………………….….26

4.2. அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம்…………….27

4.3. மாகாண வருமான இலக்குகளைத் தீர்மானித்தல்……………………………….…29

4.4 .2013 ஆம் ஆண்டுக்கான வருமான எதிர்வு கூறல்…………………………………...29

4.5. மாகாண வருமானத்தை உற்பத்தித்திறனுள்ளதாக பயன்படுத்தல்……………………31

4.5.1. அதிகாரப் பகிர்ந்தளிக்கப்பட்ட வழிகளிலிருந்து வருமானச் சேகரிப்பு………..31

4.5.2. வருமானச்சேகரிப்புக்காக தற்போதுள்ள மனிதவலுவை அனுகூலமாக பயன்படுத்தல்……………………………………………………………32

4.5.3. வருமானத்தை உற்பத்தித்திறனுள்ளதாக பயன்படுத்தல்……………………...32

5. மதிப்பிடுதல் மற்றும் மாகாணங்களுக்கு நிதிகளைப்பகிர்ந்தளித்தல்…………………………..34

5.1. அரசாங்க நிதியிடலில் பிரதான வழிகள்…………………………………………………...34

5.2. மாகாண மூலதனத் தேவைகளுக்கான கோரிக்கைகள்………………………………….34

5.3. மாகாண மீள்வரும் தேவைகளுக்கான கோரிக்கைகள்…………………………..……..35

5.4. மாகாண தேவைகளின் மதிப்பீடு…………………………………………………………36

5.4.1. மூலதனத் தேவைகளின் மதிப்பீடு……………………………………………….37

5.4.2. மீள்வரும் தேவைகளின் மதிப்பீடு……………………………………………….37

5.5. மாகாணங்களுக்கிடையில் நிதிகளைப் பகிர்ந்தளித்தல்………………………………….39

5.6. உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு நிதியிடல்…………………………………………..40

6. மாகாண அபிவிருத்தியில் முன்னேற வழிகள்……………………………………………………42

6.1. பிரதேச அபிவிருத்தி ஆரம்பநடவடிக்கைகளுடன் ஒழுங்கிடுதல்………………………..42

6.2. பிரதேச வேறுபாடுகளைக் குறைத்தல்…………………………………………………...42

6.3. முகவர் பெறுபேற்று சட்டகவேலை அணுகுமுறை……………………………………….43

6.4. பெறுபேற்று அடிப்படை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்………………………...44

6.5. மாகாணங்களுக்கு அனுகூலமான ஆளணி……………………………………………….44

6.6. உள்ளுர் அதிகாரசபைகளின் ஆளுமை விருத்தி………………………………………..45

6.7. மாகாண வருமான உத்தியோகத்தர்களின் சேவைகளை அனுகூலமாக பயன்படுத்தல்……………………………………………………………………………….45

6.8. மீள்வரும் செலவுகளிலிருந்து சேர்ந்துள்ள நன்மைகள் மீது ஆய்வு…………………..46

7. முடிவு……………………………………………………………………………………………..47

## அட்டவணைகளின் பட்டியல்


அட்டவணை 1: மொத்தக் கொடை (Block Grant ) பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012……11

அட்டவணை 2: காரணிகளைஅடிப்படையாகக்கொண்டகொடை(CBG) பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012…………………………………………………………………………12

அட்டவணை 3: மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி(PSDG) கொடை பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012……………………………………………………...14

அட்டவணை 4: மொத்த தேசிய உற்பத்திக்கு மாகாண பங்களிப்பு GDP (%)………………………16

அட்டவணை 5: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP-2009…………...……………...16

அட்டவணை 6: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP-2010………………………….……17

அட்டவணை 7: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP-2011………………………….….…17

அட்டவணை 8: மாகாண மட்டத்தில் ஆயிரம் ஆண்டு அபிவிருத்தி இலக்கு 1 அடைவு……………...19

அட்டவணை 9: மாகாணரீதியாக தனியாள் வருமானம் - 2009/10……………………………….…..20

அட்டவணை 10 : ஒளியேற்றலில் பிரதானமாக மின்சாரத்தைப்பாவிக்கும் வீடுகளின் வீதம…………..21

அட்டவணை 11 : C & D வீதிகளின் தூரம……………………………………………………….…..22

அட்டவணை 12: நிதிகள் பகிர்ந்தளிப்புக்கான காரணங்களுள்ள அட்டவணை……………….………..24

அட்டவணை 13: அரசாங்க வருமான மாற்றங்கள் – 2011 மற்றும் 2012……………………………27

அட்டவணை 14: மாகாண வருமானச் சேகரிப்பு வழிகள் - 2011……………………………………28

அட்டவணை 15: மாகாண வருமானச் சேகரிப்பு வழிகள் (செப்டம்பர் வரை) – 2012*…………….28

அட்டவணை 16: 2013ஆம் ஆண்டுக்கான வருமான எதிர்வு கூறல……………………………………30

அட்டவணை 17: 2013 ஆம் ஆண்டுக்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு மாற்றப்பட வேண்டிய முத்திரைவரியும் நீதிமன்ற தண்டப்பணமும்…………………………………………30

அட்டவணை 18: மாகாணங்களுக்கு அரசாங்க வருமானத்தின் மாற்றங்கள் – 2013…………………...31

அட்டவணை 19: மூலதனத் தேவைகள் மீது மாகாணக்கோரிக்கைகள் (PSDG) -2013……………….35

அட்டவணை 20: மீள்வரும் செலவுகளுக்கான மாகாணக்கோரிக்கைகள் – 2013 உள்ளூர் அதிகாரசபை மாற்றல்கள் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக……………………………….…………………………...…..36

அட்டவணை 21: ஏனைய மீள்வரும் செலவுகளுக்கான மாகாணக்கோரிக்கைகள் – 2013 உள்ளூர் அதிகாரசபை மாற்றல்கள் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக……………………………………………………….36

அட்டவணை 22: 2013 ஆம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவால் மதிப்பிடப்பட்ட மூலதன தேவைகள்……………………………………………………………………37

அட்டவணை 23: உள்ள மாகாண ஆளணிகளுக்கு மதிப்பிடப்பட்ட வேதனங்கள்–2013……...38

அட்டவணை 24: மாகாணங்களுக்காக மதிப்பிடப்பட்ட ஏனைய மீளவரும் செலவுகள் – 2013 முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டம் தவிர்ந்தவை……………………..39

அட்டவணை 25: மூலதன நிதிகள் பகிர்ந்தளிப்பு – 2013......................................................40

அட்டவணை 26: மொத்தக் கொடை பகிர்ந்தளிப்பு – 2013........................................40

அட்டவணை 27: அங்கத்தவர்களின் படிகள் கொடுப்பனவுக்கான பகிர்வும் உள்ளூராட்சி அதிகார சபைகள் உத்தியோகத்தருக்கான சம்பள மீளளிப்புகளும் – 2013.....................41

## பின்னிணைப்புகளின் பட்டியல்

இணைப்பு I: முகவர் பெறுபேற்று சட்டகவேலை – படிவம் 1 முதல் 6 வரை....................................................i

## 1. நிதி ஆணைக்குழுவின் ஆணை

இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் நிதி ஆணைக்குழு (நிஆ) நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகளைக்கொண்டுள்ளது.ஒன்பது மாகாணங்களுக்கிடையில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக்கொண்டு ஒன்பது மாகாணங்களுக்கும் அடிப்படைக்கொள்கைகள் மற்றும் கொள்கைகள் வழிகாட்டல்களை உருவாக்கல்-மற்றும் மாகாணங்களுக்கிடையில் நிதியைப்பகிர்ந்தளிப்பபது தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்தல் நிதிஆணைக்குழுவின் பிரதான கடமைகளாகும். நிதி ஆணைக்குழு மீது அரசியலமைபின் உறுப்புரை 154 ஆர்( 3),(4) மற்றும் (5) ஆகியவற்றால் சுமத்தப்பட்ட பொறுப்புகள் பின்வருமாறு:-

1. அரசாங்கம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீதும், ஆலோசனையோடும் வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களின் தேவைகளை ஈடு செய்வதற்குப்போதுமான நிதிளை பகிர்ந்தளிக்கும்
2. ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வது ஆணைக்குழுவின் கடமையாகும்:-
   அ) அரசாங்கத்தினால் மாகாணங்களின் பயன்படுத்தலுக்காக ஆண்டு தோறும் வழங்கும் நிதியை எந்த கொள்கை அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும்-மற்றும்

   ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.
3. நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக்கொண்டு அத்தகைய கொள்கைகளை ஆணைக்குழு உருவக்கும் போது பின் வரும் விடயங்களை கவனத்தில் எடுக்கும்.

   (i.) ஓவ்வொரு மாகாணத்தினதும் மக்கள் தொகை

   (ii.) ஓவ்வொரு மாகாணத்தினதும் தனிநபர் வருமானம்

   (iii) முன்னேற்றத்தை அவசிய தேவையாக்கி, சமூக பொருளாதார வேறுபாடுகளைக்குறைப்பது, மற்றும்

   ( iv) ஓவ்வொரு மாகாணத்தினதும் தனிநபர் வருமானத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்கிடையிலான ஆகக்கூடிய தனிநபர் வருமானத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டிய தேவை.

அரசியலைப்பின் உறுப்புரை 154 ஆர் (7) கீழ் கோரப்பட்டுள்ள நடவடிக்கை – ''நிதி ஆணைக்குழு செய்த ஒவ்வொரு பரிந்துரையையும் அது தொடர்பாக எடுக்கப்படட நடவடிக்கையையும் ஜனாதிபதி பாராளுமன்றத்ததுக்கு சமர்ப்பிப்பார''

### 1.1. அதிகாரப்பகிர்வில் பிரதானமான சட்டபூர்வமான ஏற்பாடுகள்

1987ல் மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இலங்கை அரசியல் நிர்வாக அமைப்பில் கணிசமான அதிகார மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிகாரப்பகிர்வின் பிரதான கருவிகளாக

சட்டமியற்றுதல் அடிப்படைத்தூண்களாகச் செயற்பட்டன. இச் சட்டத்தின் சட்டகவேலை தொடர்பான சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 1.1.1. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம்

சட்டமியற்றுதல் நிறைவேற்றுதல் மற்றும் நிதி அதிகாரங்களை உள்ளடக்கி அவற்றை மாகாண சபைகள் பயன்படுத்தக்கூடியவாறு ஆட்சியைப் பகிர்ந்தளிப்பதற்கான மாகாண அமைப்பு அரசியலைமப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தால் உருவாக்கப்பட்டது. மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையே அத்தகைய அதிகார உள்ளடக்க விடயமானது பதின்மூன்றாவது திருத்தத்தில் மூன்று பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்தியிலுள்ள அதிகாரங்கள்)., மாகாணப்பட்டியல் (மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள்) இணைக்கப்பட்டியல்( அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள்ளும் பகுதி) மேலும் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தினால் சட்டமியற்றுதல் ஆட்சியின் விசேடமான மூன்று வரிசைகளை உருவாக்கியுள்ளது .உதாரணம்:-மத்திய அரசு-மாகாணசபைகள்-உள்ளூராட்சி அதிகார சபைகள்.

மாகாண விடயங்கள் பட்டியல் கல்வி-கல்விச்சேவைகள்-உள்ளூராட்சி-மாகாண வீடமைப்பு நிர்மாணம்-வீதிகள் பாலங்கள் பாதைகள்-சமூகசேவைகள்-புனர்வாழ்வு-விவசாயம்-கமநலச்சேவைகள்-கிராம அபிவிருத்தி-சுகாதாரம்-சுதேச வைத்தியம்-உணவு விநியோகம் பகிர்ந்தளித்தல்-கூட்டுறவு-காணி-நீர்ப்பாசனம்-கால்நடை வளாப்பு-களிப்பூட்டல்-விளையாட்டு-முதலியனவற்றை உள்ளடக்கிய விரிவான பட்டியலாகும்

மாகாண சபைப்பட்டியல் மாகாணசபைகளால் சேகரிக்கப்படவேண்டிய வருமான வழிகளையும்- இந்த அறிக்கையின் 4ம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ள வேறு வகையான வரிகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான வருமானவழிகளையும் உள்ளடக்கியுள்ளது. மாகாண தேவைகளை ஈடுசெய்வதற்கு சேகரிக்கப்பட்ட வருமானங்களை மாகாணசபைகள் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாகாணங்களின் தேவைகளை ஈடுசெய்வதிலுள்ள இடைவெளிகளை நிரப்ப தேவையான மேலதிக நிதியை அரசாங்கம் வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யும்

அரசியலமைப்பின் 13வது திருத்தம் சட்டமியற்றல் அடிப்படையில் பின்வரும் ஏற்பாடுகளை வழங்குகின்றது.

(i.) மாகாண சபைகளை அமைத்தல்
(ii.) மாகாணங்களுக்கான ஆளுநர்களை நியமித்தல்
(iii) மாகாணசபை அங்கத்துவத்தை அனுபவித்தல்
( iv) முதலமைச்சர் நியமனம் மற்றும அமைச்சரவை நியமனமும் அதிகாரமும்
(v.) மாகாணசபைகளின் சட்டமியற்றும் அதிகாரம்
(vi.) நிர்வாக யந்திரம் தடைப்படும்போது மாற்று ஒழுங்குகள்
(vii.) மாகாண உச்ச நீதி மன்றங்களை நிறுவுதல்
( viii.) நிதி ஆணைக்குழுவை அமைத்தல்

### 1.1.2. 1987ம் ஆண்டின் 42ம் இலக்க மாகாணசபைகள் சட்டம்

பின் வரும் விடயங்கள் தொடர்பாக மாகாணசபைகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை 1987 ம் ஆண்டின் 42ம் இலக்க மாகாணசபைகள் சட்டம் தருகிறது.

(i) மாகாணசபைகளின் அங்கத்துவம்
(ii) மாகாணசபைகளில் கூட்டங்களையும் விடயங்களையும் நடத்துதல்.
(iii)மாகாணசபைகளில் நிதி நடைமுறைகள்
(iv)மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவை அமைத்தல்
(v) பிரதம செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் நியமனம்.

### 1.1.3. அரசியலமைப்பின் பதினெட்டாவது திருத்தம்

இலங்கை அரசியலமைப்பின் பதினெட்டாவது திருத்தம் 2010 செப்படம்பர் மாதம் சட்டமாக இயற்றப்பட்டு, ஏழு குழுக்களை நியமிக்கும் மாற்றம் கொண்டுவரப்பட்டது.
உறுப்புரை 41 ஏ(1) ன் கீழ் அட்டவணை 1ல் குறிப்பிடப்படும் ஆணைக்குழுத் தலைவரையும் அங்கத்தினர்களையும் ஜனாதிபதி நியமிப்பார். அத்தகைய நியமனங்களைச் செய்யும்போது அதே உறுப்புரையின் கீழ் நிறுவப்பட்ட பாராளுமன்ற சபையின் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோருவார். அட்டவணை 1 ன் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ள ஏழு ஆணைக்குழுவில் நிதி ஆணைக்குழுவும் உள்ளடங்கும்

### 1.1.4. உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான சட்டபூர்வமான அடிப்படை

உள்ளூராட்சி இலங்கை அரசாங்கத்தில் மூன்றாவதும் குறைந்ததுமான வரிசையாகும். வீதிகள், சுகாதாரம்,கழிவகற்றல்,வீடமைப்பு,நூலகங்கள், பொதுப்பூங்கா மற்றும் களிப்பூட்டல் வசதிகள்

உள்ளடங்கலாக பல்வேறு உள்ளூர் மக்கள் சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி சபைகளுடையது. சகல உள்ளூராட்சி அதிகார சபைகளும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினரால் பிரதிநிதிப்படுத்தப்படுவார்கள்.

1987ல் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகள் விடயத்தின் கீழ் அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டதாக உள்ளூராட்சி கொண்டு வரப்படடது. உள்ளூராட்சி விடயத்துக்கமைவாக மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என மூன்று சட்ட அமைப்புகளின் கீழ் இயங்குகின்றன. இலங்கையில் தற்போது 23 மாநகர சபைகளும், 41 நகர சபைகளும், 271 பிரதேச சபைகளும் உள்ளன.

கலைக்கும் அதிகாரம் உட்பட உள்ளூராட்சி அதிகாரசபைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், தற்போதைய சட்டங்களின் கீழ் தொடர்பான கட்டளைகள் மற்றும் சட்டங்களில் பாரதீனப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்கள் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு அரசியலமைப்பு திருத்தங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன..

- **மாநகர சபைகள்**

1947ம் ஆண்டின் 16ம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தில் மாநகர சபைகளுக்கான அதிகாரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்துக்கு 40க்கும் அதிகமான திருத்தங்கள் செய்யப்பட்டன. வருமானம். சனத்தொகை, வீதி வலைப்பின்னல், கைத்தொழில் மயமாக்கல் தொடர்பாடல் ஆகிய விடயங்களைக் கவனத்தில் கொண்டு நகரசபைப்பகுதி மாநகர சபையாகப் பிரகடனப்படுத்தப்படலாம்.

- **பட்டின சபைகள்**

1939ம் ஆண்டின் 61 ம் இலக்க நகர சபைகள் கட்டளைச்சட்டத்தில் நகர சபைகளின் அதிகாரங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளது. நகர சபைகள் கட்டளைச்சட்டத்துக்கு 44 க்கும் அதிகமான திருத்தங்கள் செய்யப்பட்டன.

மாநகர மற்றும் நகரசபைகளின் கடமைகள் பொதுவாக கீழே தரப்பட்டவாறு பட்டியலிடலாம்

(அ) சபைகளுக்கு பாரதீனப்படுத்தப் பட்ட அல்லது வாக்குக்கொடுக்கப்பட்ட பொது வீதிகளையும் திறந்த இடங்களையும் பேணுதலும் துப்பரவாக்கலும் (ஆ) சகல தனிப்பப்டட வீதீகளையும் சரியாகப் பேணப்படுவதையும்,துப்பரவாக வைத்திருப்பதையும் மற்றும் திருத்த வேலைகளையும் உறுதிப்படுத்தல் (இ) திட்டமிடல் மற்றும் வீதிகளை அகலமாக்கல், திறந்தவெளிகளை ஒதுக்குதல், பொது மேம்பாடுகளை நிறைவேற்றல் ஆகியவற்றை மேற்பார்வையிடலும்-நியாயதிக்கத்துக்குட்பட்ட பகுதியில் அபிவிருத்தி வளர்ச்சிக்கான ஒழுங்குகளைச.செய்தலும் (ஈ) சகல தொல்லைகளையும் இல்லாமல் செய்தல் (உ. )பொது மக்கள் நலனுக்காக, வசதிக்காக உதவிக்காக கட்டளைச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட ஏதாவது பொது பாவனைச்சேவையை ( கிடைக்கத்தக்க வளங்களின் அளவுக்கமைவாக) ஆரம்பிததலும் பேணுதலும்(ஊ. )பொது சுகாதாரம், நலன்புரி,வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தல், மற்றும் சபைப்பகுதியில் சுகாதார மற்றும் சிறப்பியல்புகளை அபிவிருத்தி செய்தல்

- **பிரதேச சபைகளள்**

முன்னர் உள்ளுராட்சி அதிகார சபைகளாக இருந்த பட்டின சபைகள் கிராமசங்கங்களுக்குப்பதிலாக 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினால் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டன.

பொது சுகாதாரம், பொது பாவனைச் சேவைகள் மற்றும் பொது போக்கு வரத்துச்சாலைகள் மற்றும் பகுதிக்குள் மக்களுக்கான பாவனை வசதிகள் உதவிகள் நலன்புரி ஆகியவற்றை பாதுகாத்தலும் மேம்படுத்தலும் தொடர்பான அதிகாரங்களை பிரதேச சபைகள் கொண்டிருக்கும்

### 1.1.5. உள்ளுராட்சி அதிகாரசபை நிதி

மாநகரசபை நிதி, நகரசபை நிதி மற்றும் பிரதேச சபை நிதி என அவர்களது நிதி நோக்கங்களுக்காக உள்ளுராட்சி அதிகார சட்டமியற்றலுக்கேற்ப உள்ளுர்அதிகார நிதிகளை ஆரம்பிக்க எந்த உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கும் அதிகாரமுண்டு. உள்ளுராட்சி

அதிகாரசபைகளின் தேவைகளுக்கேற்ப வருமானத்தைப்பெருகுவதை உறுதிப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை எடுக்க உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு சட்டமியற்றல் அதிகாரமளிக்கிறது

## 2. அரசாங்க நிதிகளை மாகாணங்களுக்கு மாற்றுதல்

அரசியலமைப்பின் பதின்மூன்றாவத திருத்தம் , அரசாங்கம் நிதி ஆணைக்குழுவின் ஆலோசனையோடு மாகாணங்களின் நிதித்தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான நிதிகளைப்பகிர்ந்தளிக்க வேண்டுமெனக் கோருகின்றது. அத்தகைய நிதிகள் மாகாணங்களுக்கிடையே சமச்சர் பிரதேச அபிவிருத்தி அடைவதற்காக பகிரப்படவேண்டிய பொறுப்பு நிதி ஆணைக்குழுமீது சுமத்தப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நிதி ஆணைக்குழு இரண்டு பிரதான கடமைகளை ஆற்றுகின்றது.

அ. மாகாணங்களால் தேசிய கொள்கை வழிகாட்டல் மற்றும் முன்னுரிமை ஆகியவற்றுடன் இணங்கிப்போவதை உறுதி செய்வதோடு, சமர்ப்பிக்கப்பட்ட நிதித் தேவைகளை பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் மாகாண நிதித்தேவைகளை மதிப்பீடு செய்கிறது. வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களின் தேவைகளுக்கு போதுமான நிதியை பகிரந்தளிக்க ஆணைக்குழு அரசாங்கத்துக்கு அறிவிக்கின்றது..

ஆ. பிரதேச வேறுபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துக்காக அத்தகைய நிதி மாகாணங்ளுக்கிடையே பகிரந்தளித்தல்

மாகாணத்தினுள்ளும் மாகாணங்களுக்கிடையிலும் வேறுபாடுகளைக்குறைக்கும் எதிர்பார்ப்போடு ஒவ்வொரு மாகாணங்களின் தேவைகளையும் ஈடுசெய்வதற்காக வருடாந்த பாதீட்டிலிருந்து நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. பின் வரும் கொடைகள் ஊடாக ஒதுக்கீடுகள், மற்றும் அத்தகைய பகிர்ந்தளிப்புகள் மாகாணங்களுக்கு வழங்கப்படுகிறது.

### 2.1. மொத்தக் கொடை (The Block Grant )

சேவை வழங்கல் முறைமையை தொடர்ந்து நடாத்துவதற்கும் மேம்படுத்துவதற்காகவும் மற்றும் மாகாணங்களின் மீள்வரும் செலவுத்தேவைகளை ஈடு செய்வதற்காகவும் இக்கொடை வழங்கப்படுகிறது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ( MSD ) அனுமதிக்கப்பட்ட ஆளணிக்காக மாகாண உத்தியோகத்தர்களின் சம்பளங்களும் வேதனங்களும் மீள் வரும் செலவுகளின் பிரதான வகையைச்சேர்ந்தது. அதன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் எல்லைக்குள் உண்மையாக உள்ள ஆளணிக்கு மட்டுப்படுத்தப்பட்ட சம்பளங்களும் வேதனங்களும் மதிப்பிடப்படுகிறது.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் அங்கத்தவர்கள் சம்பளங்கள் மற்றும் படிகள்- உத்தியோகத்தர் சம்பளங்கள் மீளளித்தல் தொடர்பாக செலவுகளை ஈடு செய்வதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு மாற்றுதல்களையும் மொத்த திட்டக்கொடை உள்ளடக்கும்.

2008முதல் 2012 வரை பரிந்துரை செய்யப்பட்ட மொத்ததிட்டக்கொடை பகிர்வும் விடுவிப்பும் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளது

**அட்டவணை 1: மொத்தக் கொடை (Block Grant ) பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012**

*ரூபா. mn*

| மாகாணம் | 2008 | | 2009 | | 2010 | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு |
| மேல் | 6,500 | 6,021 | 1,923 | 2,749 | 6,100 | 6,100 | 7,170 | 8,979 | 9,011.25 | 8,893.77 |
| மத்திய | 12,950 | 11,937 | 12,176 | 12,487 | 13,000 | 13,000 | 13,270 | 13,697 | 13,762.75 | 13,048.62 |
| தென் | 10,200 | 9,607 | 10,298 | 10,085 | 10,500 | 10,500 | 11,172 | 11,760 | 11,802.99 | 11,906.59 |
| வட | 8,100 | 7,518 | 8,349 | 7,963 | 8,400 | 8,700 | 9,153 | 9,318 | 8,556.79 | 8,500.30 |
| கிழக்கு | 8,500 | 8,104 | 9,891 | 9,421 | 10,100 | 10,100 | 10,473 | 10,952 | 11,385.07 | 10,737.26 |
| வடமேல் | 12,500 | 11,500 | 12,294 | 11,868 | 12,300 | 12,299 | 12,656 | 13,018 | 12,651.07 | 11,920.59 |
| வுட மத்திய | 6,500 | 6,068 | 6,270 | 6,513 | 7,300 | 7,300 | 7,386 | 7,596 | 7,005.42 | 6,776.02 |
| ஊவா | 8,250 | 7,684 | 7,907 | 7,807 | 8,300 | 8,300 | 8,897 | 8,948 | 9,458.83 | 9,031.70 |
| சப்பிரகமுவ | 9,000 | 8,337 | 8,893 | 8,493 | 9,000 | 9,000 | 9,823 | 10,335 | 11,243.32 | 10,736.94 |
| **மொத்தம்** | **82,500** | **76,773** | **77,999** | **77,386** | **85,000** | **85,299** | **90,000** | **94,602** | **94,877.48** | **91,551.79** |

*மூலம்: நநிதிஆணைக்குழு மற்றும் பொதுச்திறைசேரி*

## 2.2 காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை(CBG)

பிரதேச வேறுபாடுகளை குறைப்பதற்கான பங்களிப்பை நோக்கி மாகாணங்களில் சமுதாய-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்காக மூலதனச்செலவை ஈடு செய்ய பி.அ.அ.கொடை (CBG) வழங்கப்படுகிறது. அபிவிருத்திக்கு உசிதப்படி செலவு செய்வதற்காக மாகாணங்களுக்கு இக்கொடையின் கீழ் வழங்கப்படும் நிதி கிடைக்கக்கூடியதாக இருக்கும். எனினும் இக்கொடையை ஒதுக்குவதற்கு 2011 ஜூலை 26ம் திகதியிடப்பெற்ற நிதி ஆணைக்குழு FC/PSDG&CBG/CIRCULAR/2011/1 இலக்க சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டுமென மாகாணங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2008முதல் 2012 வரை செய்யப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை பகிர்வும் விடுவிப்பும் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளது

**அட்டவணை 2: காரணிகளைஅடிப்படையாகக்கொண்டகொடை(CBG) பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012**

*ரூபா.மில்லியன்*

| மாகாணம் | 2008 | | 2009 | | 2010 | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு |
| மேல் | 1,000 | 127 | 510 | 375 | 450 | 383 | 400 | 660 | 427 | 180.41 |
| மத்திய | 613 | 335 | 446 | 306 | 410 | 308 | 375 | 337 | 400 | 218.40 |
| தென் | 656 | 310 | 426 | 230 | 350 | 298 | 325 | 292 | 347 | 189.46 |
| வட | 280 | 185 | 332 | 241 | 300 | 255 | 275 | 247 | 294 | 160.52 |
| கிழக்கு | 370 | 341 | 382 | 197 | 325 | 276 | 250 | 230 | 267 | 145.78 |
| வடமேல் | 525 | 301 | 370 | 272 | 300 | 255 | 300 | 270 | 320 | 174.72 |
| வுட மத்திய | 279 | 202 | 297 | 137 | 260 | 260 | 275 | 1,277 | *1,616.63 | 1420.0 |
| ஊவா | 292 | 185 | 373 | 206 | 300 | 255 | 300 | 240 | 320 | 174.72 |
| சப்பிரகமுவ | 485 | 317 | 416 | 311 | 380 | 323 | 335 | 301 | 357 | 194.92 |
| **மொத்தம்** | **4,500** | **2,304** | **3,550** | **2,276** | **3,075** | **2,612** | **2,835** | **3,855** | **4,348.63** | **2,858.93** |

*மூலம்: நிதி ஆணைக்குழுவும் பொது திறைசேரியும்*
**குறைநிரப்பு பகிர்வுகளுடன்*

## 2.3. மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை (PSDG)

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கோடு அதிகாரப்பகிர்வளிக்கப்பட் பல்வேறு விடயங்களின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்துவதற்காக அபிவிருத்தி திட்டங்களுக்கு மூலதனநிதி வழங்குவதை இக்கொடை பிரதானமாக எதிர்பார்க்கிறது மாகாணங்கள் தமது அபிவிருத்தி திட்டங்கள் சமர்ப்பிக்கும் போது , நிதி ஆணைக்குழுவும் தொடர்பான மாகாண அதிகாரிகளும் அத்தகைய திட்டங்கள் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி கொள்கை சட்டகவேலைத்திட்டத்துக்குள் மாகாண தேவைகளை நோக்கியுள்ளதா என்பதை உறுதி செய்ய கலந்துரையாட உடன்பட்டனர். ஒவ்வொரு முதலீட்டுக்கும், அளவிடக்கூடிய பெறுபேறுகள ( வெளிப்பாடு , விளைவுகள், பயன் ) முன் படிவங்களின் படி முன் வரையறுக்கப்பட்ட சுட்டிகள் அடையாளம் காணப்படுவதுடன், குறித்த காலங்களில் கண்காணித்தலும் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு அடைவுகளை மதிப்பீடு செய்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதி ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட- தொடர்பான படிவங்களை மாகாண அதிகாரிகள் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட கண்காணித்தல் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது.

- மாகாணங்களால் தயாரிக்கப்பட்ட முகவர் பெறுபேற்று சட்டகவேலையை அடிப்படையாக வைத்து மாகாணங்களுக்கு 2013ம் ஆண்டுக்கான மா கு அ கொ (PSDG) வழங்கப்பட்டது.

மு பெ ச (ARF) அணுகுமுறைக்கு ஏற்ப, மா கு அ கொ (PSDG) முகவர் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுகிறது. சகல மாகாண முகவர்களும் முன்னரே வரையறுக்கப்பட்ட வெளிப்பாடு / விளைவுகள் சுட்டிகள் அடிப்படையில் அவர்களுடைய நோக்கு, பணி, இலக்கு, மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை அடைவதற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளைப் பயன் படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது. மாகாண முகவர்கள் முகவர் பெறுபேற்று சட்டகவேலையைத் தயாரித்துள்ளதோடு தொடர்பான மாகாணங்கள் 2013-2017 காலத்துக்குரிய நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களாக திரட்டி யுள்ளது. அத்தகைய முகவர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்ட தொகைகளைக் கவனத்தில் கொண்டு நடுத்தர கால அபிவிருத்தித் திட்டத்திலிருந்து முன்னுரிமைகளைத் தெரிவு செய்து வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என தொடரபான மாகாண முகவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். நிதி ஆணைக்குழு, ஆணைக்குழுவால் விருத்தி செய்யப்படட படிவங்களுக்கு அமைவாக பெறுபேற்று அடிப்படையில் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பயிற்சிகளை மாகாண உத்தியோகத்தர்களுக்கு வழங்கியுள்ளது.

2013ம் ஆண்டில் நிதி வழங்குவதற்காக அடையாளம் காணப்பட்ட முகவர்கள்- துறைகள் கீழே தரப்பட்டுள்ளது.

1. வீதிகள்
    1.1. மாகாண வீதிகள் புனரமைத்தல்
    1.2. தோட்ட வீதிகள்
2 போக்குவரத்து
3. காணி
4. கல்வி
5. சுகாதாரம் ( மேற்கத்தைய மருத்துவம்)
6. சுதேச மருத்துவம்
7. விளையாட்டு
8. உள்ளூராட்சி
    8.1 உள்ளூராட்சி அதிகார சபை வீதிகள்
    8.2 உள்ளூராட்சி அதிகார சபை சேவைகள்
    8.3 கழிவு முகாமைத்துவம்
9. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
10. சமூக சேவைகள்
11. வீடமைப்பு
12. கலாசார விடயங்கள்
13. விவசாயம்
14. கால்நடை

15. நன்னீர் மீன்வளர்ப்பு
16. நீரப்பாசனம்
17. கிராமிய உட்கட்டமைப்பு
18. சிறுகைத்தொழில்
19. கிராமிய மாற்று வலு
20. கூட்டுறவு அபிவிருத்தி
21. சுற்றுலா

- **சமச்சீர் பிரதேச அபிவிருத்திக்கான விசேட திட்டங்கள்**

நிதி ஆணைக்குழுவின் சம்மதத்துக்கமைவாக பிரதேச வேறுபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்டு மாகாணங்களால் அடையாளம் காணப்பட்டு உருவாக்கப்படும் நடுத்தர அளவு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சமச்சீர் பிரதேச அபிவிருத்தியின்கீழ் விசேட திட்டங்களுக்காக ஒரு குறிக்கப்பட்ட தொகை வழங்கப்படுகிறது. அத்தகைய திட்டங்கள் ஒருவருடத்திலிருந்து மூன்று வருட கால எல்லைக்குள் உருவாகக்கி அமுல்படுத்தப்பட வேண்டுமென கேட்கப்படுகிறது. இத்தகைய திட்டங்கள் அவை மேற்கொள்ளப்படுமிடங்களிலும் மற்றும் மாகாணங்களிலும் பெறுமதி சேர்தல், வறுமைக்குறைப்பு, மற்றும் தொழில்வாய்ப்புகளை உருவாக்கல் தொடர்பாக சாதகமான பலன்களை கொண்டுவர வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **நெகிழ்ச்சியான பகிர்வு**

மூலத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத அவசரமான தேவைகளை நிறைவேற்றுவதற்காக ‘‘இடைவெளி நிரப்பல்’’ லுக்காக இந்த வகையின்கீழ் குறிக்கப்பட்ட தொகை ஒதுக்கப்படுகிறது.

- **தேசிய மட்டத்தில் வடிவமைக்கப்பட்டதும் உடன்பட்டதுமான வெளிநாடு மற்றும் உள்ளூர் நிதி வழங்கும் திட்டங்கள்**

தேசிய மட்டத்தில் வடிவமைக்கப்பட்டதும் உடன்பட்டதுமான திட்டங்களுக்காக மாகாண பாதீட்டில் உள்ளடக்கப்படும் விசேட திட்டங்களுக்காக இந்த வகையின்கிழ் பகிர்வுகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் இரு பக்க மற்றும் பல பக்க கொடையாளிகள் மற்றும் உள்ளூர் நிதியிலிருந்து பெறப்படும் உதவிகளைப்பயன்படுத்தி அமுலாக்கப்படுகின்றன.2008முதல் 2012 வரை பரிந்துரை செய்யப்பட்ட மா.கு.அ..கொடை பகிர்வும் விடுவிப்பும் அட்டவணை 3ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தீ(PSDG) கொடை பகிர்வும் விடுவிக்கப்பட்டதும் 2008 – 2012**

*ரூ.மில்*

| மாகாணம் | 2008 | | 2009 | | 2010 | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு | பகிர்வு | விடுவிப்பு |
| மேல் | 2,435 | 1,050 | 1,726 | 1,567 | 1,755 | 1,737 | 1,736 | 1,380 | 1,990 | 491 |
| மத்திய | 2,045 | 1,368 | 2,572 | 1,606 | 2,145 | 1,895 | 2,490 | 1,369 | 3,013 | 856.88 |
| தென் | 2,037 | 1,293 | 1,727 | 1,102 | 1,773 | 1,656 | 1,535 | 1,283 | 1,818 | 813.85 |
| வட | 1,469 | 764 | 1,877 | 1,946 | 2,807 | 2,365 | 3,068 | 1,306 | 3,568 | 947.37 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு | 1,641 | 747 | 4,702 | 1,202 | 3,273 | 1,730 | 5,079 | 1,135 | 3,917 | 1,108.25 |
| வடமேல் | 2,018 | 1,332 | 1,530 | 1,056 | 1,633 | 1,613 | 1,542 | 1,265 | 1,836 | 816.85 |
| வுட மத்திய | 1,930 | 1,222 | 1,701 | 1,202 | 2,350 | 1,956 | 2,808 | 1,141 | 2,806.5 | 717.72 |
| ஊவா | 1,917 | 916 | 2,338 | 1,173 | 2,007 | 1,888 | 3,169 | 1,210 | 3,117 | 805.81 |
| சப்பிரகமுவ | 2,008 | 1,177 | 2,259 | 1,143 | 1,737 | 1,564 | 2,028 | 1,110 | 2,648 | 709.66 |
| **மொத்தம்** | **17,500** | **9,872** | **20,431** | **11,998** | **19,480** | **16,403** | **23,455** | **11,199** | **24,713.5** | **7,267.39** |

*மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் பொது திறைசேரி*
*குறிப்பு: அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடங்கலாக*

## 3. மாகாணங்களுக்கிடையில் வளங்களைப்பகிர்ந்தளிக்க பயன்படுத்திய காரணிகள

அரசியலமைப்புக்கு அமைவாக, மாகாண சபைகளுக்கூடாக நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதற்காக கொள்கைகளை உருவாக்கும் பொறுப்பு நிதி ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும். இந் நோக்கத்தைக் கவனத்தில் கொண்டு, ஆணைக்குழு பின் வரும் பிரதான காரணிகளைக் கருத்தில் எடுத்து மாகாணங்களுக்கிடையில் நிதிகளைப் பகிர்ந்தளிக்கிறது.

1. ஒவ்வொரு மாகாணத்தினதும் மொத்த குடிசனத்தொகை.
2. ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா ஆள் வருமானம்.
3. மாகாணங்களுக்கிடையில் சமூக-பொருளாதார வேறுபாடுகளைக் குறைப்பதற்கான தேவைகள்.

ஆணைக்குழு மாகாணங்களுக்கிடையில் பிரதேச சமூக-பொருளாதார வேறுபாடுகளை குறைப்பதை உறுதிசெய்வதற்காக பாரிய மீளாய்வு பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இப் பயிற்சியில் பின்வரும் பாரிய சுட்டிகளை பயன் படுத்தி வருகிறது.

- மாகாண மொத்த தேசிய உற்பத்தி (GDP)
- வறுமை தலைச் சுட்டு எண்
- மாகாண ஆளுக்குரிய தலா வருமானம்
- மொ தே உற்பத்தியில் மாகாணத்தின் பங்கு GDP
- மாகாணங்களில் பொருளாதார துறைகளின் சராசரி பங்கு
- வருடாந்த மாகாண வளர்ச்சி வீதம்
- மாகாணங்களின் குடிசனத்தொகைப் பங்கு

வளங்கள் பகிர்வுப் போக்கில், மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் கூறப்பட்ட கொள்கைள் மற்றும் உபாயங்களைப் பின்பற்றுதல்; அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை சட்டகவேலையை நிச்சயிக்கும் அதே வேளை, ''மக்களின் நல்வாழ்வின் குறைந்த மட்டம்'' என்ற கருத்தியலுக்கும் போதிய கவனம் கொடுக்கப்படும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதி வழங்கும் திட்டங்களின் கீழ் மாகாணங்களுக்கிடையில் வளங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையில் மூலதன நிதிகளைப்பகிர்ந்தளிப்பதும் கவனத்தில் கொள்ளப்படும்.

இந் நிதி பகிர்ந்தளிப்பு செயல் முறையில் விஸ்தாரமாக பயன்படுத்திய தெரிவு செய்யப்பட்ட பெரிய சுட்டிகள் கீழே தரப்பட்டுள்ளது

- **<u>மாகாண மொ.தே.உ</u>**

பிரதேச வளர்ச்சியில் முக்கிய சுட்டியாக மாகாணங்களுக்கிடையில் வேறுபாடுகளைக் குறைப்பதில் உபாயங்களை அடையாளம் காண்பதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் காலத்துக்கு மேலாக மாகாண மொத்த தேசிய உற்பத்தி மதிப்பீடு தருகிறது. மாகாண மொத்த தேசிய உற்பத்தி பகுப்பாய்வு- சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை ஆரம்பிப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பகுதிகளை மதிப்பிடுவதற்கான முக்கியமான( benchmark ) நில அளவை மட்டக்குறியை

வழங்குகிறது. ஆகவே நிதி ஆணைக்குழு இம் மதிப்பீட்டில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள மாகாண மொத்த தேசிய உற்பத்தியைப் பயன் படுத்துகிறது.

**அட்டவணை 4: மொத்த தேசிய உற்பத்திக்கு மாகாண பங்களிப்பு GDP (%)**

| மாகாணம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| மேல் | 46.5 | 45.4 | 45.8 | 44.8 | 44.4 |
| மத்திய | 9.6 | 9.8 | 9.8 | 10.0 | 9.8 |
| தென் | 10.5 | 10.5 | 10.5 | 10.7 | 11.1 |
| வட | 2.9 | 3.2 | 3.2 | 3.4 | 3.7 |
| வடமேல் | 9.9 | 9.9 | 9.6 | 9.5 | 10.0 |
| வட மத்திய | 4.0 | 4.7 | 4.6 | 4.8 | 4.6 |
| ஊவா | 4.9 | 4.5 | 4.5 | 4.5 | 4.5 |
| சப்பிரகமுவ | 6.4 | 6.4 | 6.1 | 6.3 | 6.2 |
| கிழக்கு | 5.2 | 5.6 | 5.8 | 6.0 | 5.7 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

*மூலம்: மத்திய வங்கி*

மாகாண மொ தே உற்பத்தித் திரட்டை துறைவாரியாக பகுப்பாய்வு செய்யும் போது, மாகாண பொருளாதாரத்தில் 2009, 2010 மற்றும் 2011ம் ஆண்டுகளுக்காக விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று பிரதான துறைகள் பல்வேறுவகையான பங்களிப்பு வழங்கியிருப்பதை அவதானிக்கலாம். துறைவாரியான பங்களிப்பு விபரங்கள் அட்டவணைகள் இல: 05, 06 மற்றும் இல.07 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP -2009**

| மாகாணம் | விவசாயம் | % | கைத்தொழில் | % | சேவைகள் | % | மொ தே உ | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 60,955 | 3 | 732,406 | 33 | 1,422,985 | 64 | 2,216,346 | 100 |
| தென் | 88,036 | 17 | 163,563 | 32 | 257,453 | 51 | 509,052 | 100 |
| சப்பிரகமுவ | 58,642 | 20 | 75,630 | 26 | 160,387 | 54 | 294,659 | 100 |
| மத்திய | 90,700 | 19 | 128,536 | 27 | 254,180 | 54 | 473,416 | 100 |
| ஊவா | 67,263 | 31 | 44,750 | 20 | 107,280 | 49 | 219,293 | 100 |
| கிழக்கு | 63,879 | 23 | 93,667 | 34 | 121,817 | 44 | 279,363 | 100 |
| வட மேல் | 87,734 | 19 | 137,572 | 30 | 240,735 | 52 | 466,041 | 100 |
| வட மத்திய | 67,902 | 31 | 44,043 | 20 | 109,348 | 49 | 221,293 | 100 |
| வடக்கு | 28,582 | 18 | 14,534 | 9 | 112,711 | 72 | 155,827 | 100 |
| **மொத்தம்ள** | **613,693** | **13** | **1,434,701** | **30** | **2,786,896** | **58** | **4,835,290** | **100** |

*மூலம்: மத்திய வங்கி*

### அட்டவணை 6: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP -2010

| மாகாணம் | விவசாயம் | % | கைத்தொழில் | % | சேவைகள் | % | மொ தே உ | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 76,083 | 3 | 804,394 | 32 | 1,644,764 | 65 | 2,525,241 | 100 |
| தென் | 100,336 | 17 | 208,954 | 35 | 291,032 | 48 | 600,322 | 100 |
| சப்பிரகமுவ | 76,792 | 22 | 85,486 | 24 | 188,776 | 54 | 351,054 | 100 |
| மத்திய | 101,795 | 18 | 161,048 | 29 | 295,641 | 53 | 558,484 | 100 |
| ஊவா | 82,243 | 33 | 48,046 | 19 | 121,659 | 48 | 251,948 | 100 |
| கிழக்கு | 74,038 | 22 | 97,202 | 29 | 160,364 | 48 | 331,604 | 100 |
| வடமேல் | 96,620 | 18 | 163,173 | 31 | 267,888 | 51 | 527,681 | 100 |
| வட மத்திய | 79,381 | 30 | 53,813 | 20 | 133,016 | 50 | 266,210 | 100 |
| வட | 30,622 | 16 | 27,151 | 14 | 133,786 | 70 | 191,559 | 100 |
| **இலங்கை** | **717,910** | **13** | **1,649,267** | **29** | **3,236,926** | **58** | **5,604,103** | **100** |

*ரூலம்: மத்திய வங்கி*

### அட்டவணை 7: துறைவாரியாக மாகாண மொ.தே.உ.பங்களிப்பு GDP -2011

| மாகாணம் | விவசாயம் | % | கைத்தொழில் | % | சேவைகள் | % | மொ தே உ | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 93,308 | 3 | 948,994 | 33 | 1,862,858 | 64 | 2,905,159 | 100 |
| தென் | 112,346 | 15 | 254,228 | 35 | 360,422 | 50 | 726,996 | 100 |
| சப்பிரகமுவ | 85,675 | 21 | 103,327 | 25 | 217,564 | 54 | 406,566 | 100 |
| மத்திய | 113,245 | 18 | 170,503 | 27 | 360,412 | 56 | 644,159 | 100 |
| ஊவா | 88,073 | 30 | 57,167 | 20 | 147,223 | 50 | 292,463 | 100 |
| கிழக்கு | 60,670 | 16 | 118,608 | 32 | 196,011 | 52 | 375,288 | 100 |
| வடமேல் | 110,615 | 17 | 193,791 | 30 | 347,729 | 53 | 652,136 | 100 |
| வட மத்திய | 70,062 | 23 | 65,036 | 22 | 164,945 | 55 | 300,042 | 100 |
| வட | 58,464 | 24 | 45,005 | 19 | 137,730 | 57 | 241,200 | 100 |
| **இலங்கை** | **792,458** | **12** | **1,956,658** | **29** | **3,794,893** | **58** | **6,544,009** | **100** |

*மூலம்:மத்திய வங்கி*

அண்மைக்காலங்களில நாட்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ள வேளை, (மொ தே உ வளர்ச்சி வீதம் 6 % க்கும் அதிகமாக) வேறுவேறு வகைகளில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் என மூன்று பிரதான துறைகளில் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்துள்ளதை அவதானிக்கலாம். சனத்தொகையின் பெரும்பகுதி ( சுமார் 48% வீதம்) தொடர்ந்தும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத்தில் தங்கியிருந்தும் மொத்த தேசிய உற்பத்திக்கு 13% வீதத்துக்கும் குறைவான பங்களிப்பே விவசாயத்துறை யிலிருந்து கிடைத்ததாக கணக்கிடும்போது, கைத்தொழில் துறையில் வளர்ச்சியானது ஏறக்குறைய மாற்றமடையாமல் இருந்ததோடு, சேவைகள் துறையில் வளர்ச்சி வீதம் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது.

மாகாண நிலையை உன்னிப்பாக நோக்குமிடத்து, 2011ம் ஆண்டில் ஊவா, வட மத்திய, மற்றும் வட மாகாணம் ஆகிய மூன்றும் 300 பில்லியன் ரூபாவுக்கும் குறைவாக கணக்கிட்டு, ஒப்பீட்டளவில் மற்ற மாகாணங்களைவிட குறைவாக உள்ளது. எனினும் முரண்பாட்டுக்குப் பிந்திய காலத்தில் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக கிழக்கு மாகாணத்தின் மொ தே உ இந்தத் தொகையை விட அதிகரிததுள்ளது.

2009-2011 இலிருந்து சகல மாகாணங்களிலும் சேவைகள் துறையின் பெறுமதி அவதானிக்கும் அதே வேளை, 2010 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் விவசாயத்துறை திடமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. மேல் மாகாணத்தில் சேவைகள் துறைக்கான பங்களிப்பு தொடர்ந்தும் முன்னணியில் உள்ள துறையாக- அதாவது விவசாயத்துறையைப்போல ஏறக்குறைய 20 மடங்கு பங்களிப்பு வழங்குவது தெளிவாகத் தெரிகிறது. 2011ஆம் ஆண்டில் ஊவாஇ வட மத்திய மற்றும் வட மாகாணங்களைத்தவிர ஏனைய எல்லா மாகாணங்களிலும் மொ தே உற்பத்திக்கு GDP கைத்தொழில் துறையின் பங்களிப்பு இரண்டாவது நிலையில் உள்ளது.

- **வறுமை சுட்டு தலை மதிப்பீடு**

2015ம் ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் ஆயிரமாவது ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை (MDGs) அடையும் வழியில் வறுமையை சரிபாதியாகக்குறைப்பதற்கு( மிகக்கூடிய வறுமையை இல்லாதொழிப்பதற்கு) சகல நாடுகளும் 2000ம் ஆண்டில சம்மதித்துள்ளன . ஏற்கெனவே வறுமையைக் குறைக்கும் போக்கில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1990/1991 இல் 26% வீதத்திலிருந்து 2009/2010 ம் ஆண்டில் 8.9% வீதமாகக் குறைவடைந்துள்ளமை இலக்குக்கு முந்திய வருடத்தில் மூன்றில் இரண்டாக நீடித்திருந்தத வறுமை குறிப்பிடத்தக்களவு குறைநதுள்ளதைக் காட்டுகிறது. . 2013 வரவு செலவு திட்ட உரையுடன் இணைந்துள்ளதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அரசின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் வறுமையற்ற நடுத்தர வருமான பொருளாதாரத்தை எதிர்வு கூறுவதோடு 2016ம் ஆண்டில் ஆஆஅ இலக்காக அதற்கு அப்பாலும் செல்லலாம் எனவும் தெரிவிக்கின்றது. இது தொடர்பாக, மாகாண அபிவிருத்தியில் முன்னுரிமையாக தொடர்ச்சியாக வறுமைக்கெதிரான போராட்டத்தில் கவனம் குவிக்கப்படும் . இது அரசாங்கத்தின் வறுமைக்குறைப்பு உபாயத்துடன் சேர்க்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். இவ் விடயத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் தெரிகின்றபோதும் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கிடையே கவனிக்கப்படத்தக்கதான பிரதேச வேறுபாடுகளும் உண்டு.. 2009/2010 இல் தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு வெளிக்காட்டுவதிலிருந்து மற்ற மாகாணங்களோடு ஒப்பிடுகையில் 2009-/ 2010ல் கிழக்கு மாகாணத்தில் வறுமை அதிகரித்தே காணப்படுகிறது..இலங்கைக்கான வறுமை சுட்டு தலை மதிப்பீடு 1990-91ல் 26.1 % வீதத்திலிருந்து 2009-10ல் 8.9 % வீதமாக்குறைந்தது இந்தக்காலத்தில் 66 % வீதத்தைக்காட்டுகிறது.

மேல் மாகாணமும் வடமத்திய மாகாணமும் தவிர்ந்த சகல மாகாணங்களிலும் வறுமை சுட்டு தலை மதிப்பீட்டு வீதம் தேசிய சராசரியான 8.9%. க்கும் அதிகமாகவே உள்ளது. சகல மாகாணங்களும் கடந்த 20 வருட காலத்தில் வறுமை சுட்டு குறைப்பில் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன..

இக்காலத்தில் மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களில் அதிக அளவு வறுமைக்குறைப்பை அவதானிக்கக்கூடிய அதே வேளை, மிகக் குறைந்தளவு வறுமைக்குறைப்பு ஊவா மாகாணதில் பதிவாகியுள்ளது. கடந்த 20 வருட காலத்தில் மாகாண ரீதியாக வறுமை நிலையின் போக்கு தொடர்பான மேலதிக விபரங்களை அட்டவணை 8 இல் உள்ளது.

**அட்டவணை 8: மாகாண மட்டத்தில் ஆயிரம் ஆண்டு அபிவிருத்தி இலக்கு 1 அடைவு**

| மாகாணம் | வறுமை தலைச்சுட்டு எண் | | | | | 2015 ஆஆ அஇலக்கு1(வத சுள) |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டுக்காலம் | | | | | |
| | 1990/91 | 1995/96 | 2002 | 2006/07 | 2009/10 | |
| மேல் | 19.1 | 16.3 | 10.8 | 8.2 | 4.2 | 9.55 |
| மத்திய | 30.7 | 36.2 | 25.1 | 22.3 | 9.7 | 15.35 |
| தென் | 30.2 | 32.6 | 27.8 | 13.8 | 9.8 | 15.1 |
| வட | * | * | * | * | 12.8 | |
| வடமேல் | 25.8 | 27.7 | 27.3 | 14.6 | 11.3 | 12.9 |
| வட மத்திய | 24.5 | 24.7 | 21.5 | 14.2 | 5.7 | 12.25 |
| ஊவா | 31.9 | 46.7 | 37.2 | 27.6 | 13.7 | 15.95 |
| சப்பிரகமுவ | 31.0 | 41.7 | 33.6 | 24.2 | 10.6 | 15.5 |
| கிழக்கு | * | * | * | 10.8 | 14.8 | |
| இலங்கை | 26.1 | 28.8 | 22.7 | 15.2 | 8.9 | 13.05 |

***மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்கள குடும்ப வருமான & செலவு மதிப்பீட்டு அறிக்கை1990/91, 1995/96, 2002, 2006/07, 2009/10***
***குறிப்பு: *தரவுகள் கிடைக்கவில்லை***

வறுமை ஏற்படுவதில் மேலேயுள்ள போக்குகளைக் கவனத்தில் எடுத்து,அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களின் வறுமையான பகுதிகளில் கவனம் செலுத்த பரிந்துரைப்பதோடு, அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களுக்கு வெளியே அதிக வளங்களை திருப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். . ஆணைக்குழுவால் முதலீட்டு உபாயங்களை ஊக்குவித்தலில் வறுமை குறைப்பில் குறிப்பாக தனித்து விடப்பட்டுள்ள பகுதிகளில் முன்னுரிமை அளிப்பதாகும்.. இவ் உபாயம் பிரதானமாக மாற்று வாழ்வாதாரத்துக் கூடாக நிலையான விவசாயம், தொழில் உருவாக்கம் மற்றும் கிராமப்பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேமபடுததல் ஆகியனவாகும் . மாகாண அதிகாரிகள் அவர்களது அபிவிருத்தித்திட்டங்ளையும் வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் இத்தகைய உபாயங்களைப் பின்பற்ற ஆணைக்குழு தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது..

- **சராசரி ஓவ்வொருவரதும் தலா வருமானம் (MPCI)**
    - வறுமை,பொருளாதார அபிவிருத்தி அளவு மற்றும் வாழ்க்கைத்தரம் (விபரங்களுக்கு அட்டவணை 6 ஐ பார்க்க) என்றழைக்கப்படும் பல விடயங்களை உள்ளடக்கிய முக்கியமான சுட்டி கொள்வனவுச்சக்தி. நாட்டிலுள்ள சகல மாகாணங்களுக்கிடையில் 2009-2010ல் மேல் மாகாணத்தில் தலா வருமானம் உயர்ந்ததாக ( ரூபா.11,561) உள்ளது.

- அட்டவணை 6 ல் காட்டப்பட்டது போல, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை முறையே வட மேல், வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்கள பெறுகின்றன. மேலே சொல்லப்பட்ட நான்கு மாகாணங்களும் தேசிய சராசரி (ரூபா9,104) யை நெருங்கியதாக ரூபா 9,000க்கு மேலுள்ளதாக தலா வருமானததை பதிவு செய்துள்ளது அப்போதைய முரண்பாட்டுசூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் தவிர ஏனைய மாகாணங்கள் தேசிய சராசரிக்கு கிட்ட நெருங்கியுள்ளது

ஒரு சமூகத்தின் கொள்வனவுச் சக்தியை அளவிடுவதற்கு கிட்டிய சுட்டியாக சராசரி ஒவ்வொருவரதும் தலா வருமானம் பொதுவாகப்பயன் படுத்தப்படுத்தப்பட்டாலும் , சமூகத்தின் வேறு வேறு அந்தஸ்துகளுக்கு மத்தியில் வருமானப்பகிர்வு கணக்கில் கருதப்படுவதில்லை. வறுமை ஏற்படுதல் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் போன்ற சமூக பொருளாதார நிலை மட்டங்களை கொள்வனவுச் சக்தி சுட்டிக்காட்டுகிறது. 2009/2010 இல் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் மேற்கொண்ட குடும்ப வருமானம் மற்றும் செலவு மதிப்பீடை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பிந்திய சராசரி ஒவ்வொருவரதும் தலா வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது. . மாகாண ரீதியாக சராசரி ஒவ்வொருவரதும் தலா வருமானம் அட்டவணை 9 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 9: மாகாணரீதியாக தனியாள் வருமானம் - 2009/10**

| மாகாணம் | தலாதனியாள் வருமானம்(ரூ.) |
|---|---|
| மேல் | 11,561 |
| மத்திய | 8,040 |
| தென் | 8,035 |
| வட | 5,515 |
| கிழக்கு | 5,663 |
| வட மேல் | 9,280 |
| வட மத்திய | 9,132 |
| ஊவா | 7,343 |
| சப்பிரகமுவ | 9,132 |
| இலங்கை | **9,104** |

*மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்கள செலவு மதிப்பீடு 2009/10*

மேல் மாகாணத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் தெளிவாகத் தெரிவதை மேலேயுள்ள அட்டவணையிலிருந்து அவதானிக்க முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2009/10 காலப்பகுதியில் சராசரி ஒவ்வொருவரதும் தலா வருமானம் குறைவாக உள்ளது என காட்டப்பட்டாலும், முரண்பாட்டுக்குப்பிந்திய தற்போதைய சூழலில் இம் மாகாணங்களிளல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வேறுபாடுகள் வரலாம் .

- **அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அடைதல்.**

வளப்பகிர்ந்தளிப்பை பயன்படுத்தலில் நிதி ஆணைக்குழு இரண்டு பிரதான உட்கட்டமைப்பு வசதிகளான ஒவ்வொரு வீட்டுக்கும் மின்சாரம் கிடைப்பதையும் மற்று மாகாணத்திலுள்ள் வீதிகளின் நீளத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டது.˙.

மின்சாரம் கிடைத்தல் உட்கட்டமைப்பு மட்டத்திலும் பிரதான சுட்டியாகவும் மக்களின் நலனோம்பலிலும கருதப்படுகிறது... விளக்கேற்றவதில் பிரதான வகையாக மின்சாரத்தைப்பயன்படுத்தும் குடும்பங்களின் எண்ணிக்கை, வீட்டில மொத்தமாகக் குடியிருப்பவர்களின் வீதம் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளது

**அட்டவணை 10 : ஒளியேற்றலில் பிரதானமாக மின்சாரத்தைப்பாவிக்கும் வீடுகளின் வீதம்**

| மாகாணம் | மாவட்டம் | 001 தொகை மதிப் | 11 தொகை மதி |
|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 85.9 | 97.9 |
| | கம்பஹ | 82.9 | 96.6 |
| | களுத்துறை | 71.8 | 94.1 |
| மத்திய | கண்டி | 70.4 | 93 |
| | மாத்தளை | 50.5 | 84.9 |
| | நுவரரெலியா | 53.7 | 88.9 |
| தென் | காலி | 72.6 | 94.1 |
| | மாத்தற | 71.5 | 94.1 |
| | அம்பாந்தோட்ட | 48.6 | 89.3 |
| வட | யாழ்ப்பாணம்“ | N.A | 73.3 |
| | மன்னார் | N.A | 63.9 |
| | வவுனியா | N.A | 71 |
| | முல்லைத்தீவு | N.A | 23.6 |
| | கிளிநொச்சி | N.A | 10.2 |
| கிழக்கு | மட்டக்களப்பு | N.A | 67.5 |
| | அம்பாறை | 49.8 | 81.9 |
| | திருகோணமலை | N.A | 78.1 |
| வடமேல் | குருணாகல் | 51 | 86 |
| | புத்தளம் | 52.3 | 83.9 |
| வட மத்திய | அநுராதபுரம் | 48.6 | 83.4 |
| | பொல்லநறுவை | 45.1 | 83.6 |
| ஊவா | பதுளை | 58.9 | 86.5 |
| | மொனராகல | 31.6 | 70.6 |
| சப்பிரகமுவ | இத்தினபுரி | 45.1 | 83.5 |
| | கேகாலை | 56.6 | 88.7 |

***மூலம்: குடிசன மதிப்பு மற்றும் வீடமைப்பு மதிப்பீடு- 2001 and 2011***

2001ம் ஆண்டிலிருந்து 2011ம் ஆண்டு வரை எல்லா மாகாணங்களிலும் மின்சாரம் வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தமை உற்சாகம் தருவதோடு, அண்மைக்காலத்தில் ஒப்படைக்கப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு காரணமாகவும் அமையும்.

மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது போல, 2011இல் வெளிச்சம் பெறும் பிரதான வழியாக அதிக எண்ணிக்கையான வீடுகள் மின்சாரம் பெற்றுக்கொண்டதை கொழும்பு (97.9%) மாவட்டத்தில் அவதானிக்கலாம். வீதத்துக்கும் அதிகமான வீடுகள் மின்சாரம் பெற்றுக் கொண்ட ஏனைய மாகாணங்கள் கம்பஹ,களுத்துறை,காலி,மாத்தறை மற்றும் கண்டி ஆகும். கடந்த சில வருடங்களில் அரசாங்கத்தின் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டதைக் குறிப்பிட வேண்டும்.

C மற்றும் D தர வகைப்படுத்தப்பட்ட வீதிகள்மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டு மற்றும் அவற்றின் அபிவிருத்தியும் பராமரிப்பும் மாகாண வீதி அதிகாரிகளின் பொறுப்பாகியது . வீதி மூலமான போக்கு வரத்து முக்கிய காரணியாகக் கருதப்பட்டு, நிதி பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் மாகாண வீதிகளின் நீளம் ஒரு சுட்டியாக எடுக்கப்பட்டது. மாகாணங்களில் தற்போதுள்ள வீதிகளின் பரப்பளவு அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 11 : C & D வீதிகளின் தூரம்**

| மாகாணம் | வீதிகளின் பரப்பு (Km.) | |
|---|---|---|
| | C தரம் | D தரம் |
| மேல் | 998 | 954 |
| மத்திய | 1666 | 578 |
| தென் | 1026 | 816 |
| வுட | 1524 | 443 |
| கிழக்கு | 726 | 372 |
| வட மேல் | 1091 | 1155 |
| வுட மத்திய | 1427 | 623 |
| ஊவா | 1521 | 216 |
| சப்பிரகமுவ | 1247 | 1097 |

*மூலம்: நிதி ஆணைக்குழு 2011*

## 3.1 .வளங்கள் பகிர்வுக்கு பயன்படுத்திய முறைகள்

காரணிகளை அடிப்படைக் கொண்ட கொடை (CBG) மற்றும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை (PSDG) ஆகியவற்றின் கீழ் நிதியைப்பகிர்ந்தளிப்பதற்காக ஆணைக்குழு நாளது வரையிலான வாய்பாடொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 2013ம் ஆண்டுக்காக பயன்படுத்திய வாய்பாட்டின் சுருக்க விபரம் பின்வருமாறு:-

பிரதான மூலகங்களின பகுப்பாயய்வு (PCA) என அழைக்கப்படும் பல மாற்று புள்ளியியல் நுட்பமாக மக்களின் வாழ்க்கைத்தரத்தோடு மிக நெருங்கிய தொடர்பான மாறிகளைப்பயன் படுத்தி சகல மாகாணங்களுக்குமான காரணங்களுள்ள அட்டவணை கணிப்பிடப்பட்டது. வளங்கள் பகிர்வு வாய்பாட்டுக்காக பின்வரும் நான்கு வகையான விடயங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது .

i. வருமானம் மற்றும் வறுமை
ii. சுகாதாரம

iii. கல்வி
iv. உட்கட்டமைப்பு வசதிகள்

வருமானம் மற்றும் வறுமை வகை மூன்று மாறிகளைக் கொண்டது,

- சராசரி ஒவ்வொருவரதும் தலா வருமானம
- வறுமை தலைச்சுட்டு எண்
- வேலையின்மை விகிதம்.

சுகாதார வகை இரண்டு மாறிகளைக் கொண்டது,

- புதிய பிரசவ இறப்பு விகிதம்
- பிறப்பில் குறைவான எடை

கல்வி வகை கொண்டுள்ளவை

- மாணவர் சேர்வு
- தரம் 4,5,9, சா/த, உ/த ஆகியவற்றில் மாணவர் கற்றல் அடைவு.

உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடக்குபவை

- மின்சார வசதியில்லாத வீடுகள்
- C,மற்றும் D வீதிகளின் நீளம்.

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள குடிசனத்தொகைப்பங்கை முக்கியமாகக்கருதி மேலேயுள்ள நான்கு வகைகளும் ஒதுக்கப்பட்டது.வாய்பாட்டு ஒதுக்கீட்டின் வெளிப்பாடு:

$$x_i = a_1 V_{1i}\bar{B} + a_2 V_{2i}\bar{B} + \ldots + a_n V_{ni}\bar{B}, \quad \sum_{i=1}^{n} a_i = 1$$

$i$ மாகாணத்துக்காக ஒதுக்கீடு $x_i$,

$i$ மாகாணத்துக்காக n வகை மாறியின் கணக்கீட்டுப்பெறுமதி $V_{ni}$,

$V_n$ வகை மாறிக்கான எடை (முக்கியத்துவம்) $a_n$

அரசாங்கத்தின் பிரதேச அபிவிருத்தி முன்னுரிமைகள் தொடர்பான காரணிகளை கணக்கில் எடுத்து வகைகளுக்கான முக்கியத்துவ ஒதுக்கீடு ($a_i$) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது..மா கு ஒ கொடைக்காக PSDG ஒதுக்கப்பட்ட முக்கியத்துவம்

- வருமானம் மற்றும் வறுமை 40%
- சுகாதாரம் 15%
- கல்வி 15%
- உட்கட்மைப்பு 30%

காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை முக்கியத்துவம் CBG weightsபின்வரும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது.

- குடிசனத்தொகை 35%
- ஒவ்வொருவரதும் தலா வருமானம் 20%
- வறுமை தலைச்சுட்டு எண் 20%
- தொழிலின்மை விகிதம் 25%

2013ம் ஆண்டுக்காக மா கு அ கொ PSDG மற்றும் கா அ கொ CGB பகிர்தளிப்பதற்காக பயன் படுத்தப்பட்ட காரணங்களுள்ள அட்டவணை (CI) யின் கணக்கீட்டுப் பெறுமதி அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளது..

**அட்டவணை 12: நிதிகள் பகிர்ந்தளிப்புக்கான காரணங்களுள்ள அட்டவணை**

| மாகாணம் | CI குடி மதிபபீடு PSDG | CI குடி மதிபபீடு CBG |
|---|---|---|
| மேல் | 0.141776 | 0.215716 |
| தென் | 0.119078 | 0.120791 |
| சப்பிரகமுவ | 0.119396 | 0.105867 |
| மத்திய | 0.125506 | 0.125938 |
| ஊவா | 0.105193 | 0.083533 |
| கிழக்கு | 0.105971 | 0.091885 |
| வட மேல் | 0.105490 | 0.110560 |
| வட மத்திய | 0.085104 | 0.072859 |
| வட | 0.092487 | 0.072850 |

***மூலம்: நிதி ஆணைக்குழு 2011***

திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மேலேயுள்ள வாய்பாட்டை அடிப்படையாக்கொண்டு மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாகாண மூலதன நிதிகள் பகிர்ந்தளிப்பு (PSDG மற்றும் CGB) பொதுவாக மேலேயுள்ள காரணங்களுள்ள அட்டவணையை அடிப்படையாக வைத்து செய்யப்பட்டது.. எனினும இச் செயற்பாட்டில், தேசிய மட்டத்தில் வெளிநாடு மற்றும் உள்நாட்டு நிதி வழங்கும் திட்டங்களின் கீழ் யதார்த்த நிலைகளையும் ஒவ்வொரு மாகாணத்தாலும் வருமானத்தை தருவிப்பதையும் கருத்தில் கொண்டு நிதி ஒதுக்கீடுகள செய்யப்பட்டது. விபரமான தொகைகள் 5ஆம் அத்தியாயத்திலுள்ள 22 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது..

## 3.2. துறைகளுக்கிடையில் வளங்களைப் பகிர்ந்தளிக்க கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள்

வேறு வேறு மாகாணங்களில் அவற்றின் சாத்திய வளங்கள், பல்வகைப்பட்ட புவியியல் மற்றும் சமூக-பொருளாதார நிலைகள் மற்றும் ஒப்பீட்டளவிலான நன்மைகள் ஆகியவற்றை அடிப்படையாகக்

கொண்டு துறைகள் / விடயப்பகுதிகள் ஆகியவற்றின் முக்கியத்தும் மாறுபட்ட அனவினதாக இருக்கும்.. பல்வேறு துறைகள் / விடயப்பகுதிகள் ஆகியவற்றுக்காக முகவர்களுக்கிடையில் மா கு அ கொடைநிதிகளை PSDG பகிர்ந்தளிக்கும் போது, நிதி ஆணைக்குழு யதார்த்தமான காட்சிகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் . இக் கொள்கை பின்பற்றப்படுவதை நிச்சயிப்பதற்காக, நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண உயர் அதிகாரிகள் தொடர்ச்சியான கலந்துரையாடலில் ஈடுபடுவதோடு அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தித் துறைகளுக்கிடையில் ஒதுக்கவேண்டிய விகிதங்களையும் தீர்மானிக்கும். மேலதிகமாக, ஒவ்வொரு துறைக்கும் விகிதங்களைத் தீர்மானிபபதில் பின் வரும் விடயங்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டது.

i. தேசிய கொள்கை சட்டக வேலையோடு ஒழுங்கமையும் நோக்கில் தேசிய துறைக்கொள்கைகள், உபாயங்கள், இலக்குகள் தொடர்பாக பிரதான தேசிய அமைச்சுக்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களாலும் முகவர்களாலும் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும் ˙இரட்டிப்பு வேலைகளைத் தவிர்ப்பதற்காக கவனத்தில் கொள்ளப்பட்டது.

ii வேறு வழிகளுக்கூடாக நிதியிடலில் விசேட திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் ஒவ்வொரு மாகாணத்திலும் பலவிதமான பயன்களை தந்தது..

iii. வேறு பட்ட வருமானக்குழுக்களுக்கிடையில் வேறுபாடுகளைக் குறைப்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் மக்கள் நல்வாழ்வின் குறைந்த மட்டம் பேணுதல்.

iv. அபிவிருத்தித்திட்டங்களுக்காக அரச-தனியார் பங்காளித்துவ (PPP) ஏற்பாடுகள் மூலம் தனியார்துறையை ஈடுபடுத்தல்.

v. மாகாணங்களில் நடாத்தப்பட்ட பெறுபேற்று அடிப்படை முகாமைத்துவ செயலமர்வுகளில் பங்கு பற்றிய சிரேஷ்ட மாகாண உத்தியோகத்தர்களால் மாகாண அபிவிருத்தித்தேவைகள் மற்றும் சமர்ப்பிக்கபட்ட நிதித்தேவைகள் மீதான அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும்.

vi. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் ஜனாதிபதியின செயலாளரின் ஆதரவின் கீழ் நடைபெற்ற மாகாணங்களால் தயாரிக்கப்பட்ட நடுத்தர அபிவிருத்தி திட்டங்கள் வெளியீட்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட அவதானங்களும் பரிந்துரைகளும்.

vii. ஜனாதிபதி செயலக ஆரம்ப நடவடிக்கைகளோடு இணங்கிப் போகத்தக்கதாக சிறிய பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தை தவிர்த்து அவை மீண்டும இயங்குவதற்காகத் தேவைப்படும் நிதியை ஒதுக்குவற்கான விசேட அறிவுறுத்தல்கள். .

மாகாணங்களின் முன்னுரிமைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கீடுகளைப் பரிந்துரை செய்வதில் சமநிலையை மேம்படுத்துவதில் ஆணைக்குழு கவனம் செலுத்துவதோடு, பயனுள்ள வள முகாமைத்துக் கூடாக மாகாணங்களில் நிலைத்த அபிவிருத்தியை நிச்சயிப்பதற்கு கவனம் செலுத்தும் எனினும், தற்போதுள்ள முறைமையின் கீழ் சில ஆராய்ச்சிகள் ,பொருளாதார மற்றும் சமூகச் சொத்துக்களை உருவாக்குவதில் குறைந்த அளவான நிதிகள் முதலீடு செய்யப்பட்டுள்ள அதே வேளை, மாகாணங்களால் குறிப்பிடக்கூடிய பங்கு செயற்பாட்டு / மீள்வரும் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருப்பதாக விவாதிக்கின்றது. அதன் விளைவாக, சமூகத்துக்கான சேவை வழங்கலின் மேம்பாடு, தொழில்களை அபிவிருத்தி செய்யக்கூடிய ஆளுமை, புதிய தொழில்வாய்ப்புகளை

உருவாக்கும் ஆற்றல், மக்களின வருமானத்தை அதிகரித்தல் ஆகியன தடங்கலாகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வந்துள்ளது. தற்போது நிதி ஆணைக்குழு இவ் விடயம் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போக்கில் ஆயிரம் ஆண்டு அபிவிருத்திகளை அடையும் நோக்கில் மனித வள அபிவிருத்தியை நோக்கி சிறந்த பெறுபேறுகளை அடைவதற்கு மாகாண மீள்வரும் செலவு பாரியளவில் பங்களித்துள்ளதாக அபிப்பிராயப்படுகிறது. மீள்வரும் செலவில் பெரும் பகுதி சுகாதார மற்றும் கல்விச் சேவைகளை வழங்குவதில் செலவிட்டுள்ளது.. ஏனைய துறைகளில் மாகாண மீள்வரும் செலவு, தேசிய அமைச்சுக்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவைப்படும் மனித வளங்களில் ஈடுசெயதுள்ளது. ஆகவே மாகாண மீள்வரும் செலவு மாகாண அபிவிருத்தி முதலீட்டுக்காக மட்டுமன்றி, தேசிய அமைச்சுக்களின் அபிவிருத்தி முதலீடுகளுக்கும் ஆதரவு வழங்கியுள்ளது..

## 4. மாகாண வருமானம்

மாகாண வருமானம் இரண்டு பிரதான வழிகளிலிருந்து பெறப்படுகிறது.

i. அரசாங்க வருமான மாற்றம்

ii அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம்.

### 4.1. அரசாங்க வருமானத்தை மாற்றுதல்

இக்கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு பொது திறைசேரி செயலாளரால் – 2010 டிசம்பர் 29ம் திகதி 01/-2010 இலக்க நிதி கொள்கை சுற்றறிக்கை வழங்கப்பட்டது. இதற்கமைவாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர், சுங்கப்பணிப்பாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஆகிய மத்திய அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட வருமானம் பின்வரும் அடிப்படையில் 2011, ஜனவரி 1ம் திகதி முதல் மாகாணங்களுக்கு மாற்றம் செய்ய்ப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் செய்யப்பட்ட கொள்கைத் தீர்மானத்துக்கு அமைவாக வி பு வ BTT இல்லாதொழிக்கப்பட்டு 2011 முதல் தேசிய ரீதியாகச் சேகரிக்கப்பட்ட வருமானத்தை பங்கிடும் புதிய முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. No: 01/2010. நிதிக் கொள்கைச் சுற்றிக்கை இலக்கம் 01/2010 பிரகாரம், தேசிய அதிகாரிகளான உள்ளுர் வருமான ஆணையாளர் நாயகம், சுங்கப்பணிப்பாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்க வரத்து ஆணையாளர் நாயகம் ஆகியோரால் சேகரிக்கப்பட்ட வருமானம் பின்வரும் அடிப்படையில் மாகாணங்களுக்கு மாற்றப்படும்

i) தேசத்தைக்கட்டியெழுப்பும் வரியில் 33 1/-3% (NBT)
ii) முத்திரை வரியின் 100 %
iii) வாகன பதிவுக்கட்டணத்தின் 70%

தே.க.வ. மற்றும் முத்திரை வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் கால ஒழுங்கில் நிதி ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் திறைசேரியால் மீண்டும் தீர்மானிக்கலாம் என்பதற்கிணங்க, இருவாரங்களுக்கொரு முறை மாகாணங்களுக்கிடையில் பின் வரும் வீதங்களுக்கேற்ப வங்கிக் கணக்கிலிடப்பட வேண்டும்

| மாகாணம் | வீதம் |
|---|---|
| மேல் | 48% |
| மத்திய | 9% |
| தென் | 9% |
| வடமேல் | 9% |
| சப்பிரகமுவ | 5% |
| வடமத்திய | 5% |
| ஊவா | 5% |
| கிழக்கு | 5% |
| வட | 5% |

2011 மற்றும் 2012 (செப்டம்பர் வரை) ம் ஆண்டுகளில் மாகாணங்களுக்கு மாற்றப்பட்ட அரசாங்க வருமான விபரங்கள் அட்டவணை 13 ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 13: அரசாங்க வருமான மாற்றங்கள் – 2011 மற்றும் 2012**

**ரூபா.மில்லியன்**

| மாகாணம் | 2011 இலக்கு | 2011 மாற்றம் | 2012 இலக்கு | 2012செப்டம்பர் வரை மாற்றம்** |
|---|---|---|---|---|
| மேல் | 15,360 | 12073* | 15,360 | 10,157 |
| மத்திய | 2,880 | 2,210 | 2,880 | 1,919 |
| தென் | 2,880 | 1,677 | 2,880 | 1,747 |
| வட | 1,600 | 1,187 | 1,600 | 958 |
| வட மேல் | 2,880 | 2,101 | 2,880 | 2,142 |
| வட மத்திய | 1,600 | 1,179 | 1,600 | 1,039 |
| ஊவா | 1,600 | 1,115 | 1,600 | 1,073 |
| சப்பிரகமுவ | 1,600 | 1,180 | 1,600 | 922 |
| கிழக்கு | 1,600 | 1,021 | 1,600 | 990 |
| மொத்தம் | **32,000** | **23,743** | **32,000** | **20,947** |

*மூலம்: மாகாணசபைகளின் மாதாந்த வருமான அறிக்கைகள் – 2011 மற்றும் 2012*
**ரூ. 1,000 மில்லியன் மிகைநிரப்புப் பகிர்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது*
***தற்காலிக*

அட்டவணை 13 ல் காணப்படும் தொகை குறித்த இலக்குக்கு உரிய தொகைகளை விட குறைந்த தொகைகளே மாகாணங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டதைக் காட்டினாலும், மேல் மாகாணம் நீங்கலாக மாகாணங்களின் வருமானம் 2011ம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் ஒப்பீட்டளவில்மாகாண வருமானம் அதிகம் என்பதை அவதானிக்கலாம் .

## 4.2. அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம்

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தில் ஒன்பதாவது அட்டவணையில் 36.01 முதல் 36.20 வரை பட்டியலிடப்பட்டது போல வரியுள்ள வருமானங்கள் மற்றும் வரியற்ற வருமானங்கள் மூலம் மாகாண வருமானம் சேகரிக்கபப்பட்டதோடு, மாகாணத்தின் சில பிரதான வருமானங்களாவன:- மோட்டார் வாகன அனுமதிக்கட்டணம், மது வரி, முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் ஆகியவை.

2011 மற்றும் 2012 ஆண்டுகளில் அதிகாரப் பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாகாண வருமானம் அட்டவணைகள் 14 மற்றும் 15 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை 14: மாகாண வருமானச் சேகரிப்பு வழிகள் - 2011

*(ரூ'000)*

| மாகாணம் | விமொவிவரி | மோட்டார்வாகனஅனுமதிக்கட்டணம் | மது வரி | முத்திரை வரி | நீதிமன்ற தண்டம் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 2,186,050 | 2,573,020 | 263,620 | 6,354,370 | 571,370 | 1,936,320 | 13,884,750 |
| மத்திய | 417,388 | 492,551 | 184,817 | 607,923 | 67,754 | 211,875 | 1,982,308 |
| தென் | 381,374 | 428,622 | 63,420 | 828,365 | 166,487 | 291,542 | 2,159,810 |
| வட*** | - | - | - | - | - | 80,983 | 80,983 |
| வடமேல் | 193,607 | 551,466 | 69,136 | 899,307 | 309,164 | 247,035 | 2,269,715 |
| வடமத்திய | 116,525 | 284,387 | 24,110 | 50,150 | 193,097 | 239,840 | 908,109 |
| ஊவா | 115,311 | 143,481 | 53,750 | 125,550 | 96,156 | 129,357 | 663,605 |
| சப்பிரகமுவ | 129,659 | 351,105 | 44,037 | 304,804 | 112,351 | 178,506 | 1,120,462 |
| கிழக்கு | 112,216 | 215,508 | 28,684 | 133,313 | 74,127 | 128,011 | 691,859 |
| **மொத்தம்** | **3,652,130** | **5,040,140** | **731,574** | **9,303,782** | **1,590,506** | **3,443,469** | **23,761,601** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த வருமான அறிக்கைகள் – 2011*
** 2010வரை விமொவிவரி சேகரிப்பு*
*** வாடகை,வட்டி,பரீட்சைக்கட்டணம்,மூலதனச்சொத்து விற்பனை,பந்தய வரி உள்ளடங்கலாக.*
**** மாகாண வருமான சேகரிப்பு நுட்பம் கிடைக்கவில்லை*

### அட்டவணை 15: மாகாண வருமானச் சேகரிப்பு வழிகள் (செப்டம்பர் வரை) – 2012*

**ரூ.மில்**

| மாகாணம் | விமொவிவ*** | மோட்டார்வாகனஅனுமதிக்கட்டணம் | மது வரி | முத்திரை வரி | நீதிமன்ற தண்டம் | ஏனையவை *** | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 65.27 | 2,407.19 | 108.79 | 5,184.66 | 486.58 | 1,208.79 | 9,461.28 |
| மத்திய | 39.70 | 464.89 | 107.57 | 645.96 | 49.36 | 140.28 | 1,447.76 |
| தென் | 25.74 | 386.82 | 20.62 | 1,169.75 | 185.90 | 173.43 | 1,962.25 |
| வட**** | - | - | - | - | - | 59.22 | 59.22 |
| வடமேல் | 52.00 | 647.69 | 42.97 | 671.91 | 243.69 | 8.26 | 1,666.52 |
| வட மத்திய | 9.40 | 295.64 | 21.03 | 36.73 | 139.33 | 93.85 | 595.99 |
| ஊவா | 2.18 | 152.86 | 27.04 | 98.88 | 57.51 | 127.96 | 466.42 |
| சப்பிரகமுவ | - | 211.64 | 25.20 | 87.00 | 92.41 | 155.01 | 571.27 |
| கிழக்கு | - | 99.75 | 18.31 | 0.02 | 51.55 | 106.74 | 276.38 |
| **மொத்தம்** | **194.30** | **4,666.48** | **371.53** | **7,894.91** | **1,306.33** | **2,073.54** | **16,507.08** |

*மூலம்: மாகாண சபை மாதாந்த வருமான அறிக்கைகள்-2011*
** தற்காலிக*
***2010வரை விமொவிவரி சேகரிப்பு*
**** வாடகை,வட்டி,பரீட்சைக்கட்டணம்,மூலதனச்சொத்து விற்பனை,பந்தய வரி உள்ளடங்கலாக.*
***** மாகாண வருமான சேகரிப்பு நுட்பம் கிடைக்கவில்லை*

மேல் மாகாணம் தொடர்ந்தும் அதிக வருமான சேகரிப்பாளராகவும் மற்றும் மொத்த வருடாந்த மாகாண வருமானத்துக்கு அதன் சராசரி பங்களிப்பு 2011ஆம் ஆண்டில் அண்ணளவாக 58% விதமாகும்.

முன்னைய வருடங்களோடு ஒப்பிடுகையில் மேல் மாகாணத்திலிருந்து மொத்த வருமானத்துக்கு கிடைத்த பங்களிப்பு குறைவடைந்து செல்லும் போக்கை அவதானிக்கலாம். அது 2008 இல் 66% வீதமாகவும் 2009 இல் 61% வீதமாகவும் 2010இல் 62% வீதமாகவும் உள்ளது. தேசிய ரீதியாகச் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கும் நுட்பத்தால் பின் தங்கிய மாகாணங்களுக்கு அவற்றின் மொத்த மாகாண வருமானத்துக்கு கூடிய பங்களிப்பை வழங்கி, வருமானத்தை அதிகரிக்க உதவியுள்ளது.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்த ஏற்பாட்டுக்கு இணங்க தொடர்பான மாகாண சபைகள் சட்டங்களை நிறைவேற்றி முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டம் ஆகியன மூலம் மாகாணங்களால் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஆண்டு தோறும் தொடர்பான உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு மாற்றும்படி கேட்கப்பட்டுள்ளது. முத்திரை வரியால் சேகரிக்கப்பட்ட வருமானம் நீதி மன்ற தண்டத்தை விட அதிகமானதாகும். தயவு செய்து அட்டவணைகள் 14 மற்றும் 15 ஆகியவற்றைப் பார்க்க.

### 4.3. மாகாண வருமான இலக்குகளைத் தீர்மானித்தல்

மாகாணங்களுக்கான வருமான இலக்குகளைத் தீர்மானிப்பதில் இரண்டு பிரதான வழிகளை மாகாண வருமானம் அடிப்படையாகக்கொண்டது.

1. 29-12-2010 திகதியிடப்பெற்ற01/2010 இலக்கம் கொண்ட நிதிக் கொள்கை சுற்றறிக்கைப்பிரகாரம் சகல மாகாணங்களுக்கும் மாற்றுவதற்கு திறைசேரியால் தீர்மானிக்கப்பட்ட வருடாந்த தொகை. நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரியால் உடன்பாடு காணப்பட்டதும் பின்வரும் வீதங்களை அடிப்படையாகக்கொண்டதுமான 2013ம் ஆண்டுக்காக எதிர்வு கூறப்பட்ட மாகாணங்களுக்கான அரசாங்க வருமான மாற்றம்.

| மாகாணம் | வீதம் |
|---|---|
| மேல் | 48% |
| மத்திய /தென்/வடமேல் | 9% |
| சப்பிரகமுவ /வடமத்திய/ஊவா/ கிழக்கு/ வட | 5% |

2. மாகாண அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட வருமானச்சேகரிப்பு மதிப்பீடு மற்றும் மாகாண வருமானச்சேகரிப்பின் கடந்த ஆற்றுகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நிதி ஆணைக்குழுவால் அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வருமானத்துக்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டது.
3. மேலேயுள்ள இரண்டு முறைகளின் கீழ் தீர்மானிக்கப்பட்ட வருமான இலக்குகளின் மொத்த தொகை மாகாணங்களுக்கு திட்டக்கொடையின் கீழ் மதிபிடப்பட்ட மீள் வரும் செலவுத்தேவை மதிப்பீடுகளிலிருந்து கழிக்கப்படும். மாகாணங்களுக்கான வருமான இலக்குகளைத் தீர்மானிக்கும் போது, நிதி ஆணைக்குழு பொதுத்திறைசேரி மற்றும் மாகாண அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

## 4.4 .2013 ஆம் ஆண்டுக்கான வருமான எதிர்வு கூறல்

நிதி ஆணைக்குழு 2013ம் ஆண்டு எதிர்வுகூறலுக்கான அடிப்படையாக முந்திய வருடங்களினதும் 2012ல் முதல் ஆறு மாதங்களினதும் மாகாணங்களின் உண்மையான வருமான சேகரிப்பு செயலாற்றுகையை பகுப்பராய்நதது.

2013ம் ஆண்டுக்காக சகல மாகாணங்களினதும் முத்திரைவரி மற்றும் நிதிமன்ற தண்டம் உள்ளடங்கலாக அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வருமான வழிகளுக்கான தொகை ரூபா.19,412 மில்லியன் என்பது நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறல். 2013ம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறல் முத்திரைவரி மற்றும் நிதிமன்ற தண்டம் நீங்கலாக ரூபா.9,775 மில்லியன். மாகாணங்களால் மதிப்பிடப்பட்ட அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வருமான வழிகளுக்கான வருமான எதிர்வு கூறல் மற்றும் 2013ம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறல் அட்டவணை 16இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 16: 2013ஆம் ஆண்டுக்கான வருமான எதிர்வு கூறல்**

*(ரூ'000)*

| மாகாணம் | முத்திரைவரி&நீதிமன்ற தண்டம் உள்ளடங்கலாக வருமான எதிர்வுகூறல் | | | முத்திரைவரி&நீதிமன்ற தண்டம் தவிர்த்து வருமான எதிர்வுகூறல் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாகாண மதிப்பீடு | நிஆ எதிர்வுகூறல் | நிஆஎதிர்வு கூறல்% | மாகாண மதிப்பீடு | நிஆ எதிர்வு கூறல் | நிஆ எதிர்வுகூறல்% |
| மேல் | 7,602,520 | 10,450,000 | 54 | 3,062,520 | 4,850,000 | 50 |
| மத்திய | 1,766,999 | 1,841,000 | 9 | 836,999 | 911,000 | 9 |
| தென் | 1,853,369 | 1,858,500 | 10 | 1,043,369 | 1,043,500 | 11 |
| வட | 188,000 | 188,000 | 1 | 188,000 | 188,000 | 2 |
| வடமேல் | 2,173,000 | 2,173,000 | 11 | 1,023,000 | 1,023,000 | 10 |
| வடமத்திய | 699,892 | 701,000 | 4 | 467,892 | 469,000 | 5 |
| ஊவா | 568,573 | 589,410 | 3 | 413,573 | 414,410 | 4 |
| சப்பிரகமுவ | 939,915 | 940,000 | 5 | 539,915 | 540,000 | 6 |
| கிழக்கு | 671,200 | 671,200 | 3 | 336,200 | 336,200 | 3 |
| **மொத்தம்** | **16,463,468** | **19,412,110** | **100** | **7,911,468** | **9,775,110** | **100** |

மூலம்: 2013 மாகாண பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் நிதி ஆணைக்குழு

2013ம் ஆண்டுக்காக அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட மொத்த வருமானத்திலிருந்து உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு மாற்ற வேண்டிய முத்திரைவரி மற்றும் நிதிமன்ற தண்ட எதிர்வுகூறல் தொகை ரூபா.9,637 மில்லியன்;விபரங்கள் அட்டவண 17 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 17: 2013 ஆம் ஆண்டுக்காக உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு மாற்றப்பட வேண்டிய முத்திரைவரியும் நீதிமன்ற தண்டப்பணமும்**

*(ரூ'000)*

| மாகாணம் | முத்திரை வரி | நீதிமன்ற தண்டம் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| மேல் | 5,000,000 | 600,000 | 5,600,000 | 58 |
| மத்திய | 860,000 | 70,000 | 930,000 | 10 |
| தென் | 640,000 | 175,000 | 815,000 | 8 |
| வட | - | - | - | - |
| வடமேல் | 825,000 | 325,000 | 1,150,000 | 12 |
| வடமத்திய | 52,000 | 180,000 | 232,000 | 2 |
| ஊவா | 100,000 | 75,000 | 175,000 | 2 |
| சப்பிரகமுவ | 300,000 | 100,000 | 400,000 | 4 |
| கிழக்கு | 260,000 | 75,000 | 335,000 | 3 |
| **மொத்தம்** | **8,037,000** | **1,600,000** | **9,637,000** | **100** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

01/2010 இலக்கம் கொண்ட நிதிக் கொள்கை சுற்றறிக்கைப்பிரகாரம், 2013ஆம் ஆண்டுக்காக தேசிய ரீதியாகச் சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா.38,000 மில்லியன் மாகாணங்களுக்கு மாற்றப்படும். 2013ஆம் ஆண்டுக்காக மாகாணங்களுக்கு மாற்றப்படும் அரசாங்க வருமானம் அட்டவண 18 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 18: மாகாணங்களுக்கு அரசாங்க வருமானத்தின் மாற்றங்கள் – 2013**

*(ரூ'000)*

| மாகாணம் | மாற்றுதல்கள் | % |
|---|---|---|
| மேல் | 18,240,000 | 48 |
| மத்திய | 3,420,000 | 9 |
| தென் | 3,420,000 | 9 |
| வட | 1,900,000 | 5 |
| வடமேல் | 3,420,000 | 9 |
| வடமத்திய | 1,900,000 | 5 |
| ஊவா | 1,900,000 | 5 |
| சப்பிரகமுவ | 1,900,000 | 5 |
| கிழக்கு | 1,900,000 | 5 |
| **மொத்தம்** | **38,000,000** | **100** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

## 4.5. மாகாண வருமானத்தை உற்பத்தித்திறனுள்ளதாக பயன்படுத்தல்

மாகாணங்களில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பகுப்பாய்வு செய்தபோது, அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து வருமானத்தை அதிகரிப்பதற்கு பெருமளவில் சாத்தியமுள்ளதோடு, உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அவற்றின் வருமானசேகரிப்பை உயர்த்துவதிலும் உதவக்கூடியதாக உள்ளது.

### 4.5.1. அதிகாரப் பகிர்ந்தளிக்கப்பட்ட வழிகளிலிருந்து வருமானச் சேகரிப்பு

மாகாணங்களில் வருமான சேகரிப்பு முறையை அதிகரித்தால் அவர்களுடைய வருமானத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் அதிகமான எண்ணிக்கையில் உள்ளன.ஆகவே மாகாண அதிகாரிகள் அவர்களுடய வளங்களை முடிந்தளவு அனுகூலமான முறையில் பயன் படுத்தி வருமான தளத்தை மேம்படுத்துவற்காக இயலுமான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

ஒன்பதாவது அட்டவணையில் 36.20 பந்தியில் பின் வரும் வாசகங்களின்படி மாகாண அதிகாரிகள் ஏனைய வழிகளிலிருந்து வருமானச்சேகரிப்புக்கு அணுகுமுறைகளைக்கண்டுபிடித்து அறிமுகப்படுத்த வேண்டும்.

''பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதாவது சட்டத்தின் கீழோ அல்லது மாகாண நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அளவு வருமானத்தை உயர்த்துவதற்கு மாகாணத்தினுள் வேறு வரி விதிப்புகள்''

ஆகவே மாகாண அதிகாரிகள் வருமான சேகரிப்பில் தற்போதுள்ளதும் மற்றும் புதிய வழிகளையும் அறிவதற்காகவும் நம்பத்தக்க ஆலோசனைச் சேவைகளைப்பெற பரிந்துரைக்கப்படுகிறது.

### 4.5.2. வருமானச்சேகரிப்புக்காக தற்போதுள்ள மனிதவலுவை அனுகூலமாக பயன்படுத்தல்

எல்லா மாகாணங்களிலுமுள்ள மாகாண வருமான திணைக்களங்களில் 500 க்கு மேற்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர். 2011ல் வி.மொ.வ. நீக்கப்பட்டதிலிருந்து, அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வருமான வழிகளிலிருந்து போதியளவு கவனம் செலுத்ததாதால இத்தகைய உத்தியோகத்தர்களின் சேவை வி மொ.வ தவிர்ந்த அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட வழிகளிலிருந்து வருமானச் சேகரிப்புக்கு குறைவாகவே பயன் படுத்தப்படுகிறது. அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட மாகாண வருமான வழிகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி அதிகாரசபை மட்டத்தில் வருமானச்சேகரிப்புக்கு பல சந்த்ப்பங்கள் உண்டு. உதாரணமாக பல வருடங்களாக நாளது வரையான சொத்துக்களிலிருந்து வரிகள் முறையாகச.சேகரிக்கப்படவில்லை. அத்தகைய வருமானச்சேகரிப்புக்காக மாகாண வருமான திணைக்களங்களில்மேலதிகமாக உள்ள மனித வலுவைப் பயன படுததுவதால் உள்ளூராட்சி அதிகார சபைகளின் வருமானத்தையும் மொத்த வருமானத்தையும் உயர்த்தலாம். மாகாண அதிகாரிகள் வருமானச் சேகரிப்புக்கு மாற்று அணுகுமுறைகளைச் செயற்படுத்த பொருத்தமான முறைகள் அறிமுகப்படுத்தலாம். மாகாணத்தின் முதலமைச்சர்கள் மற்றும் பிரதம செயலாளர்கள் மாகாண வருமான உத்தியோகத்தர்களின் சேவைகளை பயனுறுதியுள்ளதாக பெறுவதற்கு நுட்பங்களை அளறிமுகப்படுத்தும்படி ஆலோசனை வழங்கப்படுகிறது.

### 4.5.3. வருமானத்தை உற்பத்தித்திறனுள்ளதாக பயன்படுத்தல்

வருமானமாகச் சேகரிக்கப்பட்ட சில தொகை மாகாணங்களின் அபிவிருத்தி நோக்கங்களோடு நேரடியாகத் தொடர்பற்ற நடவடிக்கைகுளக்காக பயன் படுத்தப்பட்டதும் அவதானிக்க முடிந்துள்ளது. கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான மதகுகள், நடைப்பாலங்கள். கிராமிய வீதிகள், காலடிப்பாதைகள் மற்றும் படிகள் புறக்கணிக்கப்பட்டு, அநேகமான உட்கட்டமைப்பு வசதிகள் நகரப்பகுதிகளோடு நிறுத்தப்பட்டுள்ளதை சில ஆராய்ச்சிக் கற்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. ஆகவே மீள்வரும் நோக்கங்களுக்காக செலவிட்டபின் எஞ்சியுள்ள ஏதாவது வருமானம் மாகாண

அதிகாரிகளால் சமூகத்துக்கு நன்மை பயக்கக்கூடிய் ஆக்கபூர்வமான நோக்கங்களுக்கு பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

முத்திரை வரியும் நீதிமன்ற தண்டப்பணமும் மாகாண சபைகளால் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு மாற்றவேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் மாகாணசபைகள் அத்தகைய வருமானத்தை மாற்றாது பல சந்தர்ப்பங்களில் தங்களுடன் வைத்திருப்பது அவதானிக்கப்பட்டது. தொடர்பான உள்ளூராட்சி அதிகார சபைகளால் நீதிமன்ற தண்டப்பணத்தைக்கணக்கிடுவதில் சிக்கல் காரணமாக இந்நிலை ஏற்பட்டது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கோடு நிதிஆணைக்குழு நீதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தொடர்பான உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு சேகரிக்கப்பட்ட நீதிமன்ற தண்டப்பணத்தொகையை பங்கிடுவதற்கான வாய்பாட்டைச் சமர்ப்பித்துள்ளது. இணைப்பு 4 லில் தரப்பட்டுள்ள வாய்பாட்டைப் பின்பற்றும்படி தொடர்பான அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. பின்னர், ஜனாதிபதியின் செயலாளரின் வேண்டுகோளில், அவசிய நடவடிக்கைக்காக நிதி ஆணைக்குழு வாய்பாட்டை சமர்ப்பித்துள்ளது. நீதி மன்ற முறைக்கூடாக ஆணைக்குழுவின் பரிந்துரையை செயற்படுத்தும் வண்ணம் ஜனாதிபதியின் செயலாளர் நீதி அமைச்சைப் பணித்துள்ளார்

## 5. மதிப்பிடுதல் மற்றும் மாகாணங்களுக்கு நிதிகளைப்பகிர்ந்தளித்தல்

மாகாணத் தேவைகளைப் பெற்றுக் கொள்தல் மற்றும் பாதீட்டு வழிகாட்டுதல்களில் உள்ளடக்கப்பட்ட காரணிகளைப்பயன்படுத்தி அவற்றைப் பகுப்பாய்வு செய்தல் நடவடிக்கைகளில் நிதி ஆணைக்குழு சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளது. இச் செயல்முறையில், தொடர்பான மாகாண அதிகாரிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்று, மாகாண அபிவிருத்தி முன்னுரிமைகள், தேவைப்படும் சேவை வழங்கல் மற்றும் உண்மையாக உள்ள ஆளணி ஆகியவற்றில் விபரமான தரவுகள் தகவல்கள் பெற்று உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பின்னர், நிதி ஆணைக்குழு மாகாண நிதிக்கோரிக்கைகள் தொடர்பான மதிப்பீட்டை பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கும். நிதி ஆணைக்குழுவோடு கலந்துரையாடிய பின், மாகாணங்களுக்கிடையில் ஒதுக்கப்படுவதற்கான பெரும் தொகைக்கு பொதுத் திறைசேரி இணங்கும். பெரும் தொகை தீர்மானிக்கப்பட்டதும், ஆணைக்குழுவால் விருத்தி செய்யப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அத்தொகை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும். மாகாணங்களுக்கிடையில் வருடாந்த பாதீட்டிலிருந்து பகிர்ந்தளிக்க வேண்டிய நிதிகளையும் அவை தொடர்பான கொள்கைகளையும் நிதி ஆணைக்குழு அதிமேதகு ஜனாதிபதிக்கு சமர்பிக்க வேண்டுமென அரசியமைப்பு ஏற்பாடுகள் கோருகிறது.

### 5.1. அரசாங்க நிதியிடலில் பிரதான வழிகள்

வருடாந்த பாதீட்டிலிருந்து அரசாங்கத்தால் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடைகள் மூன்று வகைப்படும்; அவையாவன

#### (i) மொத்தக் கொடை

சேவை வழங்கல் முறையை நீடித்தல் மற்றும் மேம்படுத்தல் நோக்கங்களுக்காக மாகாணங்களின் மீள் வரும் செலவுத் தேவைகளை இது ஈடு செய்கிறது. இது உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வேதனங்கள் மற்றும் படிகளையும் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் ஆகியோருக்கான படிகளையும் உள்ளடக்கும்;

#### (ii) காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை (CBG)

மாகாணங்களின் சமூக-பொருளாதார நிலைகளை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட மூலதனச் செலவுத் தேவைகளை ஈடு செய்வதற்கான கொடை யாகும். ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குள் மாகாணசபைகளினால் கா அ கொடையின் CBG கீழ் நிதிகள் கிடைக்கும்.

#### (iii) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG)

பிரதானமாக மா கு அ கொ PSDG மக்களின் வாழ்க்கைத்தரதை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு மாகாண சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் தேவைகளுக்கு விசேட கவனம் செலுத்துவற்காக மூலதன இயல்புள்ள அபிவிருத்தித்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2. மாகாண மூலதனத் தேவைகளுக்கான கோரிக்கைகள்

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ‘‘நிதிகளுக்கான கோரிக்கை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்’’ பிரகாரம், 2013 ஆம் நிதி ஆண்டு தொடர்பில் நிதித் தேவைகளுக்கான மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும்படி மாகாண அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

மாகாணங்கள் அவற்றின் வருடாந்த மூலதனத்தேவைகளைச் சமர்ப்பிக்கும் போது வழிகாட்டுதல்களில் இணைக்கப்பட்டுள்ள படிவம் 2 ஐ பயன் படுத்தும்படி கேட்கப்பட்டுள்னர்

2013 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தேவைகள் மீது மாகாணக்கோரிக்கைகள் (PSDG) அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 19: மூலதனத் தேவைகள் மீது மாகாணக்கோரிக்கைகள் (PSDG) -2013**

*(ரூ.மில்)*

| மாகாணம் | மொத்தமதிப்பீடு | % |
|---|---|---|
| மேல் | 13,672 | 21 |
| மத்திய | 4,212 | 6 |
| தென் | 11,874 | 18 |
| வடக்கு | 4,521 | 7 |
| வடமேல் | 6,398 | 10 |
| வடமத்திய | 4,978 | 8 |
| ஊவா | 9,181 | 14 |
| சப்பிரகமுவ | 6,645 | 10 |
| கிழக்கு | 4,382 | 7 |
| **மொத்தம்** | **65,863** | **100** |

*மூலம்:மாகாண பாதீட்டு மதிப்பீடுகள்-2013*

*குறிப்பு: தேசிய மட்டத்தில் உடன்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிதி வழங்கும் திட்டங்கள் நீங்கலாக*

## 5.3. மாகாண மீள்வரும் தேவைகளுக்கான கோரிக்கைகள்

மீள் வரும் செலவு, பிரதானமாக இரண்டு பிரதான மூலகங்களைக்கொண்டது அது ஊழியர் வேதனாதிகளையும் ஏனைய மீள் வரும் செலவுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆளுக்குரிய வேதானாதிகள் மீள்வரும் செலவின் சம்பளங்களும் படிகளும், மாகாண ஆளணியின் மேலதிகநேரம், விடுதலைக்கால கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஏனைய மீள் வரும்செலவு போக்கு வரத்துச்செலவுகள் ,வழங்கல்கள், பராமரித்தல், ஒப்பந்த சேவைகள்,ஏனைய முகவர்களுக்கான மாற்றுதல்கள், கொடைகள், உதவுதொகைகள், வட்டிக்கொடுப்பனவுகள் ஏனையவற்றவையும் உள்ளடக்கியுள்ளது-

நிதி ஆணைக்குழு வழிகாட்டுதல்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவங்களைப் பயன்படுத்தி மாகாணங்களால் மாகாண மீள்வரும் தேவைகளுக்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்

2013 ஆம் ஆண்டுக்காக மாகாணங்களால் மீள் வரும் செலவு தேவைகளுக்கான கோரிக்கைகள் அட்டவணை 20இல் தரப்பட்டுளளது.

**அட்டவணை 20: மீள்வரும் செலவுகளுக்கான மாகாணக்கோரிக்கைகள் – 2013 உள்ளூர் அதிகாரசபை மாற்றல்கள் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக**

(Rs'000)

| No. | மாகாணம் | தனியாள் வேதனங்கள் | % | ஏனைய மீள் வரும் செலவுகள் | % | மொத்தமீள்வரும் செலவுகள் |
|---|---|---|---|---|---|---|
| **1** | மேல் | 23,660,407 | 61 | 14,914,450 | 39 | 38,574,857 |
| **2** | மத்திய | 17,267,704 | 75 | 5,855,523 | 25 | 23,123,227 |
| **3** | தென் | 14,737,423 | 77 | 4,307,197 | 23 | 19,044,620 |
| **4** | வட | 10,079,725 | 78 | 2,891,676 | 22 | 12,971,401 |
| **5** | வடமேல் | 16,715,277 | 77 | 5,130,171 | 23 | 21,845,448 |
| **6** | வுடமத்திய | 8,751,685 | 78 | 2,458,545 | 22 | 11,210,230 |
| **7** | ஊவா | 10,603,896 | 76 | 3,380,321 | 24 | 13,984,217 |
| **8** | சப்பிரகமுவ | 13,459,072 | 77 | 4,111,829 | 23 | 17,570,901 |
| **9** | கிழக்கு | 11,663,249 | 76 | 3,602,807 | 24 | 15,266,056 |
| | **மொத்தம்** | **126,938,438** | 73 | **46,652,519** | 27 | **173,590,957** |

*மூலம்: மாகாணண பாதீட்டு மதிப்பீடுகள் – 2013*

மாகாணங்களால் ஏனைய மீள் வரும் செலவு தேவைகளுக்கான கோரிக்கைகள் அட்டவணை 21 இல் தரப்பட்டுளளது.

**அட்டவணை 21: ஏனைய மீள்வரும் செலவுகளுக்கான மாகாணக்கோரிக்கைகள் – 2013 உள்ளூர் அதிகாரசபை மாற்றல்கள் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக**

(Rs'000)

| மாகாணம் | ஏனைய மீள் வரும் செலவுகள |
|---|---|
| மேல் | 4,480,674 |
| மத்திய | 3,553,696 |
| தென் | 3,003,312 |
| வட | 1,950,631 |
| வடமேல் | 3,095,239 |
| வுடமத்திய | 1,947,728 |
| ஊவா | 2,799,860 |
| சப்பிரகமுவ | 3,055,091 |
| கிழக்கு | 2,499,336 |
| **மொத்தம்** | **26,385,567** |

*மூலம்: மாகாணண பாதீட்டு மதிப்பீடுகள் – 2013*

## 5.4. மாகாண தேவைகளின் மதிப்பீடு

மாகாணங்களால் மூலதன மற்றும் மீள்வரும் செலவு மீது சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் நிதி ஆணைக்குழுவால் அரசாங்கத்துக்கு பரிந்துரைகளைச் செய்வதற்கு முன்பாக கவனமாக மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டது. மாகாணத்தேவைகளை மதிப்பீடு செய்யும் போது, அரசாங்க அபிவிருத்திக் கொள்கை சட்டகவேலையுடன் ஒழுங்கமைந்திருத்தல், நிதி ஆணைக்குழுவால

வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள், மாகாணங்களுக்கான நடுத்தரகால அபிவிருத்தித்திட்டங்கள், திறைசேரியாலும் பொது நிர்வாக அமைச்சாலும் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் மாகாணங்களில் பொதுநிதிகளைச் செலவிட்டு அடைந்த முந்திய ஆற்றுகைகள் கவனத்தில எடுத்துக்கொள்ளப்படும்

மாகாண மூலதன தேவைகளை மதிப்பீடு செய்யும் போது, தேசிய கொள்கைச் சட்டக வேலை மற்றும் மாகாண நடுததரகால திட்டங்கள் ஆகியவற்றுக்குள் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு ஆணைக்குழு விரிவான பகுப்பாய்வு செய்யும்.

(i) சேவை வழங்குதலைப் பேணுதல்.

(ii) சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்தல்.

(iii) எதிர்பார்க்கும் பெறுபேறுகளை பயனுறுதியுள்ளதாக அடைதல்.

(iv) இரட்டிப்பையும் வளங்கள் வீணாவதையும் தவிர்த்தல்.

(v) முன்னுரிமைத்தேவைகளுக்கு விசேட கவனம் செலுத்தல்.

(vi) மாகாண முகவர்களின் செயற்படுத்தல் ஆளுமை.

(vii) உகந்ததன்மை மற்றும் நோக்கம்.

### 5.4.1. மூலதனத் தேவைகளின் மதிப்பீடு

2013 ஆம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவால் மதிப்பிடப்பட்ட மூலதன தேவைகள அட்டவணை 22 ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 22: 2013 ஆம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவால் மதிப்பிடப்பட்ட மூலதன தேவைகள்**

*(ரூபா. mn)*

| மாகாணம் | மாகுஅகொ | | காஅஅகொ | |
|---|---|---|---|---|
| | நிஆ பரிந்துரை | % | நிஆ பரிந்துரை | % |
| மேல் | 5,671 | 14.2 | 1,726 | 21.6 |
| மத்திய | 5,020 | 12.6 | 1,008 | 12.6 |
| தென் | 4,763 | 11.9 | 966 | 12.1 |
| வட | 3,699 | 9.2 | 583 | 7.3 |
| வடமேல் | 4,220 | 10.5 | 884 | 11.1 |
| வட மத்திய | 3,404 | 8.5 | 583 | 7.3 |
| ஊவா | 4,208 | 10.5 | 668 | 8.4 |
| சப்பிரகமுவ | 4,776 | 11.9 | 847 | 10.6 |
| கிழக்கு | 4,239 | 10.6 | 735 | 9.2 |
| **மொத்தம்** | **40,000** | **100** | **8,000** | **100.0** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

### 5.4.2. மீள்வரும் தேவைகளின் மதிப்பீடு

மாகாணங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மீள்வரும் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது, ஆணைக்குழு பின்வரும் பிரதான மூலகங்களை கணக்கில் எடுக்கும்;

(i). முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணி.

(ii). உண்மையாக உள்ள ஆளணி மற்றும் வெற்றிடம்.

(iii). நேர்கோட்டு அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகள் உடன்பட்ட புதிய நியமனங்கள்

(iv). தனியாள் வேதானாதிகள், சம்பள நிலுவைகள் மற்றும் உத்தியோகத்தர் கடன்களுக்கான மதிப்பீடுகள்.

(v). மூலதனச் சொத்துகள் பராமரித்தல் உள்ளடங்கலாக ஏனைய மீள் வரும் செலவு மதிப்பீடுகள்.

(vi). தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான படிகள்.

(vii). உள்ளூர் அதிகார சபைகள் மற்றம ஏனைய முகவர்களுக்கான மாற்றங்கள்.

2013ஆம் ஆண்டில் உள்ள மாகாண ஆளணிக்கு தனியாள் வேதானாதிகள் உட்படமாகாண மீள்வரும் தேவைகள் அட்டவணை 23 ல் காட்டப்பட்டள்ளது.

**அட்டவணை 23: உள்ள மாகாண ஆளணிகளுக்கு மதிப்பிடப்பட்ட வேதனங்கள் – 2013**

| இல | மாகாணம் | தற்போதைய ஆளணி | % | தனியாள் வேதனங்கள் (ரூபா'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சம்பளம் & வேதனம் | % | மேல. நேரம் விடுதலை கொடுப்பனவு | % | வேறு கொடுப்பனவு | % | மொத்தம் (PE) | % |
| 1 | மேல் | 53,864 | 18 | 14,542,555 | 20 | 825,578 | 12 | 5,395,502 | 18 | 20,763,635 | 19 |
| 2 | மத்திய | 40,274 | 14 | 9,473,757 | 13 | 1,067,787 | 15 | 3,697,401 | 13 | 14,238,945 | 13 |
| 3 | தென் | 35,234 | 12 | 8,686,194 | 12 | 701,843 | 10 | 3,475,024 | 12 | 12,863,061 | 12 |
| 4 | வட | 23,814 | 8 | 5,309,886 | 7 | 507,976 | 7 | 2,260,120 | 8 | 8,077,982 | 7 |
| 5 | வடமேல் | 38,580 | 13 | 9,294,663 | 13 | 655,636 | 9 | 3,677,089 | 13 | 13,627,388 | 13 |
